# திருகோணமலையில் ஜீவனோபாயங்களும் உணவுப் பாதுகாப்பும் யுத்தமும்

Korf[a], Benedikt and Rohini Singarayer[b]

a Friedrich-Wilhelms Universität Bonn, Zentrum für Entwicklungsforschung; 53113 Bonn und Humboldt-Universität zu Berlin, Fachgebiet Ressourcenökonomie. e-mail: pfudili@gmx.de

b Integrated Food Security Programme Trincomalee (IFSP), Sri Lanka. e-mail: ifspsl@sri.lanka.net
internet www.ifsp-srilanka.org

## 1 அறிமுகம்:

இலங்கையில் நடைபெற்றுவரும் உள்நாட்டு மோதல் தற்போதிருக்கும் சமூக, அரசியல், பொருளாதார மற்றும் கலாச்சார கட்டமைப்புகளில் புதையுண்டும் அவற்றினுடைய ஒரு வெளிப்பாடாகவும் உள்ளது. இவ்வாறாக இந்த உள்நாட்டு மோதல் ஒரு தற்காலிகமான நெருக்கடியில்லாமல் ஒரு நீண்டகாலமாக தாக்குப் பிடிக்கும் ஒரு அம்சத்தைக் கொண்டுள்ளது. இம்மாதிரியான, நவீன மோதலிற்குப் பிந்திய இத்தகைய ஒரு நிகழ்வை குறிப்பிடுவதற்கு, மனிதநேய உதவிக்கான தொடர்புகள் “சிக்கலான அரசியல் அவசரநிலைமை” என்னும் பதத்தைப் பயன்படுத்துகிறது: வளங்களைப் பெற்றுக்கொள்வதில் ஏற்படும் அரசியல் போட்டியில் இருந்தே தோன்றும் இந்த அவசர நிலைமைகள் அநேக தருணங்களில் இனவடிவம் அல்லது இனவிடுதலை வடிவத்தை உடையதாக இருந்து அவை ஒரு குறிப்பிட்ட இனத்தின் மேல் உள்ள விசுவாச உணர்வால் வடிவமைக்கப்பட்டும், அதே நாட்டில் வசிக்கும் மற்றைய இனங்களின் மீதான அதீத வெறுப்பையும் கொண்டது. இலங்கையின் விடயத்தில் இங்கு நடைபெறும் மோதலை ஒரு பல பரிமாண நிகழ்வாக அல்லது பலவிதமான நெருக்கடிகளை உள்ளடக்கிய ஒன்றாக புரிந்துகொள்வது அத்தியாவசியமாகிறது. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சிங்களவர்கள் அதிகமாக மேலாதிக்கம் செலுத்தும் ஆயுதப்படையினருக்கும் இடையில் ஒரு மோதலாக பரிணமித்திருக்கும் இந்த பரந்துபட்ட அளவிலான மோதலின் அடிப்படைப் பிரச்சனை யாதெனில் தமிழ் சிறுபான்மையினருக்கும் பௌத்த சிங்கள பெரும்பான்மையினருக்கும் இடையில் ஏற்பட்டிருக்கும் மனக்கசப்பே ஆகும். இனங்களுக்கிடையிலான இந்த முரண்பாட்டிற்கு முக்கிய காரணியாக விளங்கும் இந்த மனக்கசப்பிற்கு மேலதிகமாக வேறு சமூக, அரசியல் மற்றும் இனரீதியிலான பிளவுகள் இலங்கையிலுள்ள மூன்று இனங்களின் (உ+ம் முஸ்லிம்கள், சிங்களவர்கள், தமிழர்கள்) மத்தியிலும் இருக்கின்றன.

இத்தகைய சிக்கலான அரசியல் அவசரநிலைமையினால் எழுந்துள்ள பாதிப்புறு சூழலில் வாழ்ந்துவரும் குடும்பங்கள் படிப்படையாக மோசமடைந்துவரும் பொருளாதார நடைமுறைகளுக்கு ஏற்ப தம்மை மாற்றிக் கொள்ளவேண்டிய நிலைமைகளுக்கு தள்ளப்பட்டும், வன்செயல் வடிவங்களில் திடீரென கிளம்பும் அரசியல் அதிர்ச்சிகளுக்கு ஈடுகொடுத்து வாழ்வதற்கும் வேண்டியவர்களாகிறார்கள். இவ்வாறாக மோதலினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வசிக்கும் கிராம சமூகங்கள் “அபாயமடைந்துள்ள ஜீவனோபாயங்கள்” என வர்ணிக்கப்படலாம்: அபாயநிலை, நிச்சயமற்றநிலை ஆகியவற்றில் திடீரென ஏற்பட்ட ஒரு அதிகரிப்பை அவர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இலங்கையின் கிழக்குப்

பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அனுபவ அடிப்படை ஆய்வுகளின் (empirical studies) அடிப்படையில் இந்த ஆவணம், இம்மாதிரி மிகக் கடுமையான நிலைமைகளில் மக்கள் தமது ஜீவனோபாயங்களை மேற்கொள்வதற்காக எவ்வகையான தந்திரோபாயங்களை பயன்படுத்துகிறார்கள் என்பதை வெளிப்படுத்த எண்ணியுள்ளது. இந்தப் பிரதேசம் இரு சாராருக்குமிடையில் நடைபெறும் மோதலினாலும் இனங்களுக்கிடையிலான முரண்பாடுகளாலும் குறிப்பாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அவசரநிலைமைகளின் போது தேவைப்படும் மனிதாபிமான, அபிவிருத்தி உதவிகளை மேலும் பொருத்தமான செயற்திட்ட தலையீடுகள் மூலம் அளிக்கும் நேரத்தில் பொருத்தமான தலையீடுகளை உருவாக்குவதற்காக மக்கள் மேற்கொள்ளும் ஜீவனோபாய உத்திகளை புரிந்து கொள்வது அவசியமாகிறது. இத்தகைய கொள்கைகள், அவசர நிலைமைகளின் போது மக்கள் வெறுமனே நிவாரணங்களையும் சேமலாபங்களையும் பெற்றுக் கொள்பவர்களாக அவர்களை வைத்திருக்காமல் அவர்கள் மேற்கொண்டிருக்கும் ஜீவனோபாய உத்திகளை ஸ்திரப்படுத்துவதற்கு உதவியும் அவைகளை ஆதரிப்பவைகளாகவும் இருந்து, மக்கள் தமக்கிருக்கும் வாய்ப்புகளையும் எல்லைகளையும் விஸ்திரப்படுத்திக் கொள்வதற்கு அவை முயலவேண்டும்.

இந்த ஆவணம் பின்வருமாறு முன்னேறுகிறது: உணவுப் பாதுகாப்பு, ஜீவனோபாயங்கள் மற்றும் பாதிப்புறு சூழல் ஆகியவை தொடர்பான எண்ணக்கரு அணுகுமுறைகளின் ஒரு சுருக்கமான வர்ணனையும் இந்த அணுகுமுறைகள் சிக்கலான அரசியல் அவசரநிலைமைகளில் எவ்வாறு பிரயோகிக்கப்பட முடியும் என்பதனையும் முதலாவது பகுதி தருகிறது. ஸ்ரீலங்காவின் கிழக்குப் பிரதேசத்தில் அமைந்துள்ள திருகோணமலை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட விடய ஆய்வின் மூலம் பெறப்பட்ட அனுபவ மூல பெறுபேறுகளை பகுதி 2 விவாதிக்கிறது. இந்த அனுபவ மூல கண்டுபிடிப்புகள் LTTE யினருக்கும் ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கும் இடையில் சமீபத்தில் கைச்சாத்திடப்பட்ட யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கு முன்னதாக நடைபெற்ற ஆராய்வுகளின் அடிப்படையாகக் கொண்டுள்ளன என்பதை கருத்தில் கொள்ளுவது முக்கியமானதாகும். இவ்வாறாக இந்தக் கண்டுபிடிப்புகள் யுத்தகாலத்தில் மக்கள் உயிர் பிழைத்திருப்பதற்கு அவர்களால் மேற்கொள்ளப்படும் தந்திரோபாயங்களை பிரதிபலிக்கின்றனவே தவிர யுத்தநிறுத்தத்திற்குப் பின்னர் மக்கள் மேற்கொள்ளும் உண்மையான ஜீவனோபாய உத்திகளை பிரதிபலிப்பன அல்ல.

## 2 ஜீவனோபாயங்கள், யுத்தம், பாதிப்புறுதன்மைகள்:

*உணவுப் பாதுகாப்பும் யுத்தமும்*

சிக்கலான அவசர நிலைமைகளில் உணவுப் பாதுகாப்பின்மை ஒரு முக்கியமான பிரச்சனையாகும். உணவுப் பாதுகாப்பின்மையின் அடிமட்டக் காரணங்கள் அனேகமாக மோதலினது மூல காரணங்களிலேயே உள்ளது. எவ்வாறாயினும், உணவுப் பாதுகாப்பின்மையே மோதலையும் வன்செயலையும் உருவாக்கும் ஒரு காரணியாக கருத முற்படுவது நீடித்துக் கொண்டிருக்கும் சமூக முரண்பாடுகளின் சிக்கலான நிலைமைகளின் முக்கியத்துவத்தையும் தீவிர போக்கையும் குறைத்து மதிப்பிடுவதாகும். மறுபுறத்தே நோக்குமிடத்து, உணவுப் பாதுகாப்பின் மீதான மோதலின் தாக்கத்தை அனேகமான காலங்களில் தெளிவாக புரிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது: வன்முறைகள் உயர்ந்து

செல்லும் போது மக்களின் சனத்தொகையில் ஒரு கணிசமான பகுதியினருக்கு உணவுப் பாதுகாப்பின்மை கடுமையானதாக உருவெடுக்கிறது.

உணவுப் பாதுகாப்பை ஒரு உணவு உற்பத்திப் பிரச்சனையாகவும் உணவில் தேசிய அளவிலான தன்னிறைவு வீழ்ச்சிப் பிரச்சனையாகவும் அடிக்கடி குறைவாக எடை போடப்படுகிறது. என்றாலும் பெருமட்டத்தில் (macro level) உணவுப் பாதுகாப்பு உண்டென்றாலும் அது குடும்ப மட்டத்திலும் அல்லது தனிநபர் மட்டத்திலும் சகலருக்கும் இருக்கும் என்பதற்கு எந்தவொரு உத்தரவாதமுமில்லை (Kelegama 2000). உணவு உள்ளூரிலோ அல்லது பிரதேசத்திலோ போதியளவு கிடைத்தாலும் மக்கள் பட்டினியால் வாடக் கூடும் என்று வாதிடும் “பஞ்சங்களின் உரித்துடைமை கோட்பாட்டை” (entitlement thesis of famines) Amartya Sen (1981) கோடிட்டுக் காட்டியுள்ளார். அனேகமாக, மந்தபோஷாக்கும் பட்டினியும் உணவு கிடைப்பது சம்பந்தமான பிரச்சனையோடு சம்பந்தப்பட்டுள்ளதிலும் பார்க்க மக்கள் உணவை கொள்வனவு செய்வதற்கு அவர்களுக்குள்ள கொள்வனவு சக்தி அல்லது அவர்களுக்குள்ள ஏனைய உணவு பெறல் உரித்துடைமைகள் சம்பந்தமான பிரச்சனைகளாகவே உள்ளன. இவ்வாறாக ஒருங்கிணைக்கப்பட்ட உணவு போஷாக்குப் பாதுகாப்பு (FNS) எண்ணக்கரு உணவுப் பாதுகாப்பினுடைய மூன்று பரிமாணங்களை இனம் காண்கிறது (BMZ 1997, 1998):

(i) எந்த நேரங்களிலும் உணவு கிடைக்கக்கூடியதாக இருத்தல் (உள்ளூரில் உணவு போதியளவில் உற்பத்தி செய்யப்படுவதன் மூலமோ அல்லது உணவை இறக்குமதி செய்யப்படுவதன் மூலமோ உள்ளூர் சந்தைகளில் உணவு தாராளமாக கிடைக்க்கூடியதாக உள்ளதா?)

(ii) எந்த நேரங்களிலும் உணவைப் பெறக்கூடியதாக இருத்தல் (உணவை குடும்பங்கள் கொள்வனவு செய்வதற்கு தேவையான கொள்வனவு வலு அல்லது உணவை வேறு வழிகளில் பெறுவதற்கு வேறு உரித்துடைமைகள் உள்ளனவா?

(iii) போதுமான நிறையுணவு தரத்திற்கு உணவு கையாளப்படுகிறதா? உணவு பயன்படுத்தப்படுகிறதா? (போஷாக்குள்ள உணவு வகைகளை மக்கள் தயாரிக்கின்றார்களா? அவற்றை அகத்துறிஞ்சுவதற்கு ஏற்றவாறு அவர்களுடைய தேக ஆரோக்கிய நிலை உள்ளதா?)

உணவுப்பாதுகாப்பின்மை ஒரு நீடித்த உணவுப் பாதுகாப்பின்மை அல்லது ஒரு நிலையில்லாத உணவுப்பாதுகாப்பின்மை நிலைமையாக இருக்கக் கூடியதாக உள்ளதால் மேற்குறித்த சகல குணாம்சங்களும் காலப் போக்கில் மாற்றமடையாது ஸ்திரமாக இருப்பது அத்தியாவசியமாகிறது. ஒரு குடும்பத்தினது போஷாக்கு நிலைமை தொடர்ந்தும் குறைவாக இருக்கும் நிலையில் நீடித்த உணவுப் பாதுகாப்பின்மையின் மூலகாரணமாக வறுமைநிலை உள்ளது. ஆனால் சிக்கலான அவசரநிலைமைகளின் போது மாறுதலுக்குட்படும் (transitory) உணவுப் பாதுகாப்பின்மை, நீடித்த உணவுப் பாதுகாப்பின்மையினால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களையும் பாதிக்கப்படாத குடும்பங்களையும் தாக்கக்கூடியது. குறுகியகால உணவுப் பாதுகாப்பின்மை, குடும்பங்கள் உணவைப் பெறுதலில் ஏற்படும் ஒரு தற்காலிக வீழ்ச்சியாகும். இந்த உருமாறும் காலம் (period of transition) அனேகமாக திடீரென காத்திராப் பிரகாரம்

ஏற்படும் அதிர்ச்சிகளுக்கு (இயற்கை அனர்த்தங்கள் போன்றவை - 2001 ஆம் ஆண்டு திருகோணமலையில் வீசிய சூறாவளி) முகம் கொடுக்க நேரிடும் சந்தர்ப்பங்களில் தற்காலிகமானவை. வருடத்தில் சில குறிப்பிட்ட காலங்களில் உணவு தட்டுப்பாடாக கிடைக்கக்கூடிய நேரமும் உண்டு (பருவகால உணவுப் பாதுகாப்பின்மை). இவ்வாறாக, நீடித்த உணவுப் பாதுகாப்பின்மையால் மிக அதிகமாக பாதிப்புறக்கூடிய குடும்பங்கள், தனிநபர்கள் ஆகியோரே அதிர்ச்சிகளினால் மிகக் கடுமையாக பாதிப்புறுபவர்களாவர் (முன் கொணர்வு- Thomson & Metz, 1997).

*நிலைத்துநிற்கக்கூடிய கிராம ஜீவனோபாயங்களின் வடிவம்*

உணவுப் பாதுகாப்பைப் பற்றி மேலும் உறுதியாக நிரூபிக்கப்பட்ட விவரணங்களின் பொதுவான கருத்தே ஜீவனோபாய அணுகு முறையாகும் (Alwang et al., 2001). Amarthya Sen இன் உருவாக்கத்தால் உந்தப் பெற்றும், பிரித்தானிய அரசின் சர்வதேச அபிவிருத்திக்கான திணைக்களத்தினால் (DFID 2000) ஊக்குவிக்கப்படுவதுமான அபிவிருத்தியினுடைய வாய்ப்பு, குறிக்கோள்கள் மற்றும் முன்னுரிமைகள் ஆகியவற்றைப் பற்றிக் கருத்திலெடுக்கும் ஒரு முறையே நிலைத்து நிற்கும் கிராம ஜீவனோபாயங்களின் வடிவமாகும். முந்தைய காலங்களில் அபிவிருத்தி புறஉருக்களுடன் ஒப்பிடும்போது ஜீவனோபாயங்களின் வடிவத்திலுள்ள ஒரு முக்கியமான பலம் யாதெனில் அவைகள் தமது பிரச்சனைகள், கட்டுப்பாடுகள் மற்றும் தேவைகள் ஆகியவற்றிற்கு அழுத்தம் கொடுப்பதிலும் பார்க்க ஒரு தொடர் முறையில் (holistic) மக்களுடைய ஆற்றல்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. ஜீவனோபாயங்கள் மீது செல்வாக்கு செலுத்தி அவற்றை உருவமைக்கும் நிறுவனங்களும் ஜீவனோபாயங்களும் மாற்றமடையக் கூடியவை என்பதைத் தெரிந்துள்ளன. தொகை மதிப்பீட்டு இலக்கங்களை உருவாக்குவதிலும் பார்க்க தொடர்புகளை புரிந்து கொள்வதற்கு முயலும் நிலைத்து நிற்கக்கூடிய கிராம ஜீவனோபாயங்களின் புற உரு ஒரு தர மதிப்பீட்டு அணுகு முறையாகும்.

**பெட்டி 1: ஜீவனோபாயத்தின் வரைவிலக்கணம்**

*வாழ்வதற்கு தேவையான வழிவகைகளான ஆற்றல்கள், ஆதனங்கள் (சமூக வளங்கள் மற்றும் மூலப் பொருட்கள் ஆகிய இரண்டும் உள்ளடங்களான) மற்றும் செயல்பாடுகளை ஜீவனோபாயம் கொண்டுள்ளது. இயற்கை வள ஆதாரத்தை சிறுக அழித்திடாமல் இருக்கும் அதேவேளை, அழுத்தங்கள், அதிர்ச்சிகள் ஆகியனவற்றிற்கு முகம் கொடுக்கக் கூடியனவாகவும் அவற்றிலிருந்து சுதாகரித்துக் கொள்ளக் கூடியனவாகவும் தனது ஆற்றல்களையும் ஆதனங்களையும் இப்போதும் எதிர்காலத்திலும் பராமரிக்கக் கூடியனவாகவும் அல்லது உயர்த்தக் கூடியனவாகவும் இருக்கும் போது ஜீவனோபாய் நிலையானதாகும்.*

மூலம்: **Carney 1998**

ஒரு சூழல் பாதுகாப்பு முறையில் (பெட்டி 1) கிராமங்களில் வறுமையை சமாளிப்பதற்கு நிலைத்திருக்கக்கூடிய வழிவகைகளை பெறுவதற்காக DFID (2000) புற உருவைப் பயன்படுத்தும் வேளையில், சிக்கலான அரசியல் அவசர நிலைகளில் இவ்வாறாக மித மிஞ்சிய சமூக, பொருளாதார மற்றும் அரசியல் புற நிபந்தனைகளில் வாழும் சமூகங்களின் நடத்தை முறைகளை அவதானித்து, பகுத்தாய்து மேலும் சிறந்த முறையில் அவற்றை புரிந்து கொள்வதற்கும் தற்போது நடைபெறும் ஆய்வு ஜீவனோபாய புற உருவை ஒரு பகுத்தாய்வு உத்தியாக பயன்படுத்துகிறது.




<u>வடிவம் 1: நிலைத்திருக்கும் கிராம ஜீவனோபாயங்களின் புற உரு (DFID 2000 திருத்தியமைக்கப்பட்டது)</u>

ஒரு குடும்பத்தினுடைய சமூக - பொருளாதார பிழைத்திருப்பலின் மீது (survival)[1] தாக்கம் புரியும் குடும்பத்தினுடைய உள்வாரி, வெளிவாரி காரணிகளின் முறைமைகளை பரிசீலிப்பதற்கும் அவற்றை பகுத்தாய்வதற்குமான ஒரு வழியே ஜீவனோபாயத் தொகுதி புற உருவாகும் (வடிவம் 1). ஒரு தரப்பட்ட பாதிப்புறு சூழலில் (புற நிபந்தனைகள்) மக்களினுடைய ஜீவனோபாய உத்திகள் எவ்வாறிருக்கும் என்பதை இது பரிசீலிக்கிறது. ஆறு வகையான முதன்மை ஆதனங்களை (இயற்கை, பௌதீக, மானுட, சமூக, அரசியல் மற்றும் நிதிமூல) மக்கள் தம்மகத்தே கொண்டுள்ளனர். மக்கள் ஜீவனோபாய உத்திகளை மேற்கொள்வதற்கும் அதன்மூலம் சில குறிப்பிட்ட பெறுபேறுகளை அடைவதற்கும் அவர்கள் பயன்படுத்தவும் ஒன்றிணைக்கவும் கூடிய வளங்கள் இந்த வளங்கள்தான். இந்த பெறுபேறுகள் ஜீவனோபாயங்களின் மீது அனுகூலமான தாக்கங்களையும் பிரதிகூலமான தாக்கங்களையும் கொண்டுள்ளது (பின்னூட்டு வலயங்கள்). எந்த ஆதனங்களை எவர் பெறமுடியும் என்பதனையும் சில குறிப்பிட்ட ஆதனங்களின் உண்மையான மதிப்பை நிர்ணயிப்பதிலும் கட்டமைப்புகளும் செயல்முறைகளும் முக்கிய பங்கை ஆற்றுகின்றன. ஒரு முதன்மை ஆதனம் மற்றைய முதன்மை ஆதனங்களாக மாற்றப்படக்கூடிய எல்லைமீது சந்தைகளும் சட்டபூர்வமான தடைகளும் ஒரு ஆழ்ந்த செல்வாக்கினை கொண்டுள்ளன.

படிப்படியாக நடைமுறை மாற்றங்களை மக்கள் எதிர்கொள்ள வேண்டி இருக்கிறார்களோ அல்லது அவர்கள் திடீர் அதிர்ச்சிகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறார்களோ என்பதன்படி ஜீவனோபாய உத்திகள் மாற்றமடையும். நீண்டகால மாற்றங்களுக்கும் சவால்களுக்கும் (நடைமுறைகள்) ஏற்றவாறு மக்கள் தமது ஜீவனோபாய உத்திகளை சரிசெய்யும் விதங்களில்

[1] குடும்ப நடத்தைகளை புரிந்து கொள்வதற்கும் மற்றும் இவ்வாறாக குடும்ப ஜீவனோபாயங்களை பகுத்தாய்வதற்கும், ஒரு குடும்பத்தினுள்ளே தனிநபர்களின் குறிப்பான பாதிப்புறுதன்மையும் குடும்பத்தினுள்ளே மாற்றியமைக்கும் சக்திகளும (dynamics) மிகவும் முக்கியமானவைகளாகும்.

கிட்டத்தட்ட நிதானத்துடனும் உணர்வுடனுமுள்ள செயல்முறை மாற்றத்தை, மாற்றிஅமை (adaptive strategies) தந்திரோபாயங்கள் குறிக்கின்றன. இயற்கை அனர்த்தங்கள் மூலமாகவும் அரசியல் அனர்த்தங்கள் மூலமாகவும் இடையிடை ஏற்படும் அழுத்தங்கள் அல்லது திடீரென ஏற்படும் அதிர்ச்சிகளுக்கு ஒரு குறுகியகால பிரதியுத்தரமாக (response) இருப்பது ஈடுகொடு உபாயங்களாகும்.

*பாதிப்புறுதன்மையும் அபாயநிலையும்*

இலங்கையில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த கிராம சமூகங்கள் "இடரடைந்த ஜீவனோபாயங்கள" அல்லது "அபாயநிலையிலுள்ள ஜீவனோபாயங்கள" என வர்ணிக்கப்படலாம்: பாதிப்புறுதன்மையின் முழு வாயிற்படியையும் மேம்படுத்தும் சுற்றாடல் அபாயங்கள், சந்தை தொடர்பான அபாய நிலைகள் மற்றும் சண்டை தொடர்பான நிச்சயமற்ற தன்மைகள் ஆகியவற்றால் தோற்றுவிக்கப்பட்ட பலதரப்பட்ட பாதிப்புறு தன்மைகளை அவர்கள் எதிர்கொள்கின்றனர். சுயமான முறையில், இயற்கை அனர்த்தங்களால் விளைவிக்கப்படும் ஜீவனோபாய இடர்களைக் குறிக்கவே பாதிப்புறு தன்மை எண்ணக்கரு பிரதானமாக பயன்படுத்தப்பட்டது (Bohle 1993; Chambers 1989). சிக்கலான அரசியல் அவசர நிலைகளின் போது (CPE) ஏற்படும் குடும்பங்களின் பாதிப்புறு தன்மையை வர்ணிப்பதற்கும் இது பயனுள்ளதாக இருக்கும். இது, வெளிவாரி (வெளிப்படுத்தல்) மற்றும் உள்வாரி (ஈடுகொடுத்தல்) பரிமாணங்களை இனங்காண்கிறது.

(i) <u>ஆபத்த நிலைகள், அழுத்தம் மற்றும் அதிர்ச்சிகள் ஆகியவற்றிற்கு முகம் கொடுத்தல்</u>: சிக்கலான அரசியல் நிலைமைகளில் (CPE) அரசியல் அதிர்ச்சிகளே மிகவும் வெளிப்படையான தோற்றத்தைக் கொண்டுள்ள வேளையில் ஒரு நீண்டகால வீழ்ச்சி முறையினையையும் எம்மால் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. (உட்கட்டமைப்புகளின் அழிவு, விவசாய உற்பத்தியில் வீழ்ச்சி, சந்தை வலைப் பின்னல்களில் சிதைவு).

(ii) <u>ஈடுகொடு தந்திரோபாயங்கள் போதாமை:</u> வன்செயல்களாலும் சண்டையினாலும் (அரசியல் அதிர்ச்சிகள்) ஏற்படும் மிகக் கடுமையான விளைவுகளுக்கு ஈடுகொடுப்பதற்கு மக்களுக்கு மிகக் குறைந்த அளவிலேயே ஆற்றல்கள் உள்ளன. தமது இருப்பிடங்களை விட்டு வேறிடங்களுக்கு செல்ல இயலுபவர்களால் சண்டை நடக்கும் இடத்தை விட்டு விலகிச் செல்லலே (இடம்பெயர்வு, குடியகலல்) இந்நிலைக்கு ஈடுகொடுக்கும் பிரதானமான தந்திரோபாயமாக இருப்பது போல் உள்ளது.

(iii) <u>கடுமையான பின்விளைவுகள்:</u> சிக்கலான அரசியல் நிலைமைகளில் (CPE) குடும்பங்கள் அனுபவிக்கும் அதிர்ச்சிகள், அபாயநிலைகள் ஆகியன, அவர்களது உற்பத்தி ஆற்றல்கள் சிதைந்து போவதை தடுக்க முடியாத அளவிற்கு குடும்பங்களுடைய மீட்சி ஆற்றலிற்கு ஊறு விளைவிக்கின்றன. ஒரு தாழ்ந்த (உளரீதியாக, சமூகரீதியாக, மற்றும் பொருளாதார ரீதியாக இழிவான நிலைக்கு தள்ளப்படல்) அவலமான வாழ்க்கை நிலையே இயல்பான வாழ்க்கையாகிறது.

வடிவம் 2 சிக்கலான அவசர நிலைமைகளில், அழுத்தங்கள், அதிர்ச்சிகள் மற்றும் அபாயநிலைகள் ஆகியவற்றை எதிர்கொள்ளுகையில் அவை எவ்வாறு ஜீவனோபாயங்களின் பாதிப்புறுதன்மையை பாதிக்கின்றன என்பதையும் குடும்பங்கள் எவ்வாறு இந்த வெளிவாரியாக சுமத்தப்பட்ட நிபந்தனைக்கு ஏற்ப தம்மை மாற்றியமைத்து அவற்றிற்கு ஈடுகொடுக்கின்றன என்பதையும் வடிவம் 2 விவரிக்கின்றது. இடர்மட்ட அதிகரிப்பினாலும் - பாதுகாப்பு இடர் மற்றும் பொருளாதார இடர் - பாதிப்புறுதன்மையின் நுழைவாயிலை அகலமாக்கும் பொருளாதார வளர்ச்சிக்கான வாய்ப்புகளின் வீழ்ச்சி (சண்டையின் பிரதிகூல பலாபலன்கள்) ஆகியவற்றாலும் சிக்கலான அவசர நிலைமைகளில் அடிமட்ட ஒப்பீட்டு பாதிப்புறுதன்மை (baseline vulnerability) அமைதிச் சூழலிலுள்ள அடிமட்ட ஒப்பீட்டு பாதிப்புறுதன்மையிலும் பார்க்க கூடுதலாக உள்ளது. இந்த நிலைமைக்கு ஏற்ப மக்கள் தமது ஜீவனோபாய உத்திகளை மாற்றியமைத்துக் கொள்கிறார்கள். குறுகியகால அதிர்ச்சிகள் (இயற்கை அனர்த்தங்கள், அரசியல் அதிர்ச்சிகள், வன்முறைகள்) திடீரென ஏற்பட்டு ஒரு நிச்சயமற்ற தன்மையுடன் காணப்படும் சமநிலையை மாற்றியமைத்து பாதிப்புறுதன்மையை (தற்போது நிலவும் பாதிப்புறுதன்மை) அதிகரிக்கின்றன. இந்த ஜீவனோபாய அபாயநிலைக்கு ஏற்ப ஈடுகொடு தந்திரோபாயங்களை மக்கள் மேற்கொள்கிறார்கள்.




**வடிவம் 2: பாதிப்புறுதன்மையும் ஜீவனோபாய உத்திகளும்**

ஜீவனோபாய தொகுதி மீண்டும் மெதுவாக உயிர்ப்படைய ஆரம்பித்து, ஒரு புதிய ஜீவனோபாய செயற்பாடுகள் தொகுதியை உருவாக்குவதற்காக, முந்திய மாற்றமடையும் தந்திரோபாயங்களினதும் (adapting strategy) ஈடுகொடு தந்திரோபாயங்களினதும் மூலகங்களை உள்ளடக்கியதான ஒரு புதிய மாற்றமடையும் தந்திரோபாயத்தை பயன்படுத்துகின்றன. கட்டமைப்புகளும் செயன்முறைகளும் (நிறுவனங்கள்) மாற்றமடைபவை மற்றும் அவை தொடர்ச்சியாக காலப்போக்கில் புதிய வடிவங்களைப் பெற்றுக் கொண்டே இருக்கின்றன

(Scoones 1998). சிக்கலான அரசியல் அவசர நிலைமைகளில் குடிசார் நிறுவனங்கள் விகாரப்படுகின்றன: உள்ளீடுகள், சந்தைகள் போன்ற சேவைகளையும் வளங்களையும் மக்கள் சிரமமின்றி பெற்றுக் கொள்வதை இந்த கட்டமைப்புகளும் செயன்முறைகளும் பெருமளவில் தீர்மானிக்கின்றன. இவைகள் சமூக அரசியல் பேரம் பேசல் செயன்முறையின் ஒரு அங்கமாக விளங்குகின்றன. சிக்கலான அரசியல் அவசரநிலைகளில் பண்பு(படுத்தப்பட்ட)ள்ள ஆளணியினரதும் நிறுவனங்களினதும் இழப்பினூடு அதிகார சமச்சீரற்றதன்மை போராளிகளிற்கு (இராணுவம், எதிர்ப்பாளர்கள் ஆகிய இருவருமே) அனுகூலமாக உள்ளன. அரசியல் மற்றும் சமூக நிறுவனங்களின் மீது வன்முறைகளின் ஆதிக்கம், அச்சுறுத்தல், அச்சம் ஆகியன பிரயோகிக்கப்படுகின்றன.

இம்மாதிரியான அபாயநிலையை அடைந்துள்ள ஜீவனோபாயங்களில், இடர் முகாமைத்துவம் (நிச்சயமற்ற தன்மையையும் சேர்த்து) ஜீவனோபாய உத்திகளுடைய வெளிப்படையாகவுள்ள ஒரு தோற்றமாகும். அபாயநிலை தோன்றுவதற்கு முன்னரே அதை எதிர்பார்த்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதை இடர் குறைப்பு தந்திரோபாயங்களாகவும் இழப்புகள் ஏற்பட்ட பின்னர் அவற்றை முகாமைத்துவம் செய்வதை பிரதியுத்தர தந்திரோபாயங்கள் (response strategies) எனவும் வருமான சீர்படுத்து தந்திரோபாயங்களையும் (income smoothing strategies) நுகர்வு சீர்படுத்து தந்திரோபாயங்களையும் (consumption smoothing strategies) வேறுபடுத்தி Vaulmaul (2001) கூறுகிறார். இடர் குறைப்பு தந்திரோபாயங்கள் பிரதானமாக வருமான பல்வகையாக்கம் (diversification), உத்தரவாத நுட்பங்களை கட்டியெழுப்பல் (சேமிப்புகள், ஆதனங்கள்) மற்றும் இடர் பகிர்ந்து கொள்ளும் தந்திரோபாயங்கள் ஆகியவற்றின் மீது கவனம் செலுத்துகின்றன. பிரதியுத்தர தந்திரோபாயங்கள் நுகர்வை ஸ்திரப்படுத்தவும் குடும்ப ஆதனங்கள் மீது ஒரு பாரிய சுமையையும் ஏற்படுத்த முனைகின்றன: அவசரகால நிலைமைகளிலே, குடும்பங்கள் தமது சேமிப்புகளை பயன்படுத்துவதையும், ஆதனங்களை விற்பதையும், தற்காலிகமாக உணவுப் பாவனை, உணவு உட்கொள்ளல் ஆகியவற்றை குறைப்பதையும் மேற்கொள்வார்கள். மிக வறுமையான குடும்பங்களைப் பொறுத்தளவில் அவர்கள் தமது பிரதான ஜீவனோபாய ஆதனங்களை விற்றுவிட்டு குடியகன்று செல்ல நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகக்கூடும். இவ்வாறாக இவர்கள் தருமத்தின் மீதும் நிவாரணத்தின் மீதும் தங்கியிருக்கும் நிலை உருவாகிறது. இவ்வாறாக. அனேகமான சந்தர்ப்பங்களில் இடருக்குப் பிந்திய பாதிப்புறுதன்மையின் மட்டம், குடும்பங்களினுடைய முதன்மை ஆதனங்களின் மட்டுப்படுத்தப்பட்ட மீட்சி ஆற்றலினால் (மீளும் தன்மை-resilience) இடருக்கு முந்திய பாதிப்புறுதன்மையின் மட்டத்திலும் பார்க்க அதிகரிக்கும். பாதிப்புறுதன்மையின் இந்த அதிகரிப்பு "விரிவடைந்த பாதிப்புறுதன்மை" என அழைக்கப்படும் (Bohle 1993). சிக்கலான அரசியல் அவசர நிலைமைகளில், அதிர்ச்சிகள் அடிக்கடி நிகழ்ந்து, குடும்பங்களினுடைய அகத்துறிஞ்சும் ஆற்றலையும் மீட்சி ஆற்றலையும் படிப்படியாக வெறுமையடையச் செய்கிறது. ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒரு புதிய நெருக்கடி, குடும்பங்கள் அதிர்ச்சிக்கு (வடிவம் 2 ஐப் பார்க்க) முகம் கொடுப்பதற்குத் தேவையான அகத்துறிஞ்சும் ஆற்றலையும் விட அதிகமாகி, அந்தக் குடும்பம் வெளி உதவியில் தங்கிவிட நேரிடுகிறது. சிக்கலான அரசியல் நிலைமைகளிலுள்ள குடும்பங்கள் தமது முதன்மை ஆதனங்கள் தீரும் நிலையை நோக்கியும் அதிகரித்த பாதிப்புறு மட்டத்தை நோக்கியும் அதிவேகமாக செல்வதை எதிர்நோக்குகின்றன.

## 3 திருகோணமலையில் யுத்தத்தைப் பற்றிய கருதுகோள்களும் யுத்தத்தின் தாக்கமும்

இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கிடையே ஒரு கேந்திர ஸ்தானத்தில் அமைந்துள்ள திருகோணமலை ஒரு பல்லின மாவட்டமாகும். தமிழீழத்தின் (தமிழீழ விடுதலைப் புலிகளால், LTTE, கேட்கப்படும் தமிழர்களின் தாயகம்) தலைநகர் என பிரகடனப்படுத்தப்பட்டுள்ள திருகோணமலை ஒரு பாரிய இயற்கைத் துறைமுகத்தைக் கொண்டுள்ளது. இந்த மாவட்டத்தின் சனத்தொகை வீதம் தற்போது கிட்டத்தட்ட மூன்றில் ஒவ்வொரு பங்கும் மூன்று பிரதான இனங்களாக (தமிழர், முஸ்லிம்கள், சிங்களவர்) இருந்துவருகின்ற வேளை இந்த மூன்று இனங்களுக்கிடையேயுள்ள சனத்தொகை வீதம் ஒரு அரசியல் சர்ச்சைக்குரியதாக இருக்கின்றது. பிரதானமாக கரையோர பிரதேசங்களில் தமிழ்க் கிராமங்களும் முஸ்லிம் கிராமங்களும் ஒன்றுடன் ஒன்று நெருக்கமாக அமைந்திருக்கும் வேளையில், சிங்களவர் பிரதானமாக பயிர்ச்செய்கைப் பகுதிகளிலும் குடியேற்றப் பகுதிகளிலும் நாட்டின் உட்பகுதியை அண்மித்த பிரதேசங்களில் வசிக்கின்றனர். இந்த மாவட்டத்தில் மோதல், மோதலிலீடுபட்டுள்ள இருபகுதியினராகிய இலங்கை ஆயதப்படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் (LTTE) இடையே பகைமையையும் வெறுப்பையும் வளர்த்து அங்கு வசிக்கும் இனங்கள் ஒருவர் மீது ஒருவர் அதீத பகைமை உணர்வு கொள்ள வைக்கிறது (O'Sullivan 1997). கிழக்குப் பிரதேசத்திலே வன்முறையானது அரசாங்கத்திறகும் LTTE யினருக்கும் இடையில் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருக்கவில்லை. கிழக்கு மாகாணத்தில் இடையிடையே இனங்களுக்கிடையில் மோதல்கள் உருவாகியுள்ளன. 1990 களில் முற்பகுதியில் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே நடந்த கலவரங்களை விசேடமாக குறிப்பிட முடியும். 1990 ஆம் ஆண்டிலிருந்து இந்த உள்நாட்டு மோதல் வடக்கு கிழக்கு மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களிலும் மோசமான நிலையை அடைந்திருந்தாலும், 1980 ஆம் ஆண்டுகளிலிருந்து திருகோணமலை மாவட்டத்தில் வாழும் தமிழ், சிங்கள சமூகங்களுக்கிடையே இடையிடையே ஏற்பட்ட கலவரங்கள் அனேகம். பொருளாதார செயற்பாடுகளுக்கு ஏற்பட்ட இத்தகைய தடங்கல்கள் காரணமாக வடக்கு கிழக்கு மாகாணத்திலிருந்து தேசிய GDP யிற்கு வழங்கப்படும் பங்களிப்பு 1980 களில் 15% த்திலிருந்து 1997 களில் 4% மாக குறைந்துள்ளதாக கணிக்கப்பட்டுள்ளது (DER 2000). 1990-95 காலப்பகுதியில் வருடமொன்றிற்கான சராசரி எதிர்மறை வளர்ச்சி வீதம் 6.2% என UNDP (1998) கணிப்பிடுகிறது. 1995 ஆம் ஆண்டுவரையில் கிழக்கு மாகாணம் வடமாகாணத்தைப் போன்று கடுமையாகப் பாதிக்கப்படவில்லை. எவ்வாறாயினும், 1990 களின் பிற்பகுதியில் இருந்து இராணுவ நடவடிக்கை, வன்முறையின் பல்வேறு வடிவங்கள், பாதுகாப்பின்மை ஆகியவை இப்பிரதேத்தினுடைய பொருளாதார நிலைமீது ஒரு எதிர்மறையான தாக்கத்தைக் கொண்டுள்ளன: இனங்களுக்கிடையிலான வர்த்தக வலைப்பின்னல்களும் முறைமைகளும் இடைஞ்சல்களுக்கு உள்ளாயின. மக்களுடையதும் பொருட்களுடையதும் சுயாதீன நகர்வையும், (mobility) மற்றும் சந்தைகள், சேவைகளை மக்கள் பெற்றுக் கொள்வதையும் சோதனைச் சாவடிகள், அனுமதிப் பத்திரம் (பாஸ்) போன்ற முறைமைகள் தடைப்படுத்துகின்றன (PIMU 2001). பதினெட்டு வருடகால சண்டையினாலும் உள்நாட்டு மோதலினாலும் உயிர்கள், வீடுவாசல்கள், காணி ஆகியவை இழக்கப்பட்டு உட்கட்டமைப்புகளும் ஜீவனோபாயங்களின் உற்பத்தி ஆதாரங்களும் தகர்க்கப்பட்டுள்ளன. அடிப்படை வசதிகளான சுகாதார சேவைகள், கல்வி போன்றவை போதுமானதாக இல்லை.

மேலும் அரச, தனியார் துறை ஆகியவற்றின் உதவி வழங்கும் சேவைகள் தடைப்பட்டமை, விவசாய உள்ளீடுகள் கடன் வசதிகள் ஆகியவை மிகக் குறைந்த அளவில் கிடைத்தல், கிராம பாதைகளின் சீரழிவு மற்றும் விநியோகம், சந்தைப்படுத்தல் முறைமைகளுக்கேற்படும் இடைஞ்சல்கள் ஆகியன விவசாய சம்பந்தமான செயற்பாடுகளை கட்டுப்படுத்துகின்றன. கடுமையாக கட்டுப்படுத்தப்பட்ட உள்ளூர் பொருளாதார நிலை, உற்பத்திப் பெருக்கத்திற்கு கிடைக்கும் வாய்ப்புகளை தனிநபர்கள் பரிசீலிப்பதை தடுக்கிறது.

குறிப்பு:

5 வயதிற்கு உட்பட்ட பிள்ளைகளின் மந்தபோஷாக்கு, <-2 SD, NCHS1995/96.

**தேசிய தரவு வடக்கு கிழக்கு மாகாணங்களை தவிர்த்துள்ளது (வகிமா). மூலம்: குடிசன மதிப்பீடு புள்ளி விபரவியல் திணைக்களம்: சனத்தொகை சுகாதார ஆய்வு 1995/96**

**வடிவம் 3: திருகோணமலையிலும் இலங்கையிலும் போஷாக்கு தரம்**




மூலம்: Reinhard & Krämer 1999

மோதலின் விஸ்தரிப்புடன் வட-கிழக்கின் வறுமைநிலையும் மோசடைந்துள்ளது. இப்பிரதேசத்தில் வாழும் மக்களில் ஏறத்தாள 80% மானோர் வறுமைக் கோட்டிற்கு (அடிப்படை உணவுப் பெட்டி)[2] கீழேயே வாழ்ந்து வருவதாக கணக்கிடப்பட்டுள்ளது. திருகோணமலை மாவட்டத்தில் வாழும் மக்களில் ஏறத்தாள 90% மானோர் அரச உதவியிலேயே (உணவு முத்திரை, உலர் உணவுப் பங்கீடு, சமூக இடமாற்றங்கள்)[3] தங்கியுள்ளனர். வறுமையும் கிடையாமையும் (deprivation) இந்த மாவட்டத்தில் ஒரு சமமற்ற முறையில் காணப்படுவதுடன் சண்டையில் ஈடுபட்டிருக்கும் இருபகுதியினருக்கும் இடையேயுள்ள எல்லைக் கோட்டின் வழியே அமைந்துள்ள கடுமையான சர்ச்சைக் குள்ளாகியிருக்கும் இடங்களில் தனித்த நிலையிலுள்ள வறுமை இடையிடையே காணப்படுகிறது. சண்டை மற்றும் யுத்தம் ஆகியவற்றின் விளைவுகளான குடும்பங்களில் நிலவும் உணவுப் பாதுகாப்பின்மை, கடுமையானதாகவும் நீடித்ததாகவுமான மந்தபோஷாக்கினை ஏற்படுத்தி, தற்போது அச்சமூட்டும் மட்டத்தினை அடைந்துள்ளது. தேசிய மட்டத்திலான தரவுகள் கூறுவதிலும் பார்க்க (வடிவம் 3) மேலும் மிக உயர்ந்த மந்தபோஷாக்கு மட்டங்கள் குழந்தைகள் மத்தியில் காணப்படுவதாக திருகோணமலை ஒருங்கிணைக்கப்பட்ட உணவுப் பாதுகாப்பு செயற்திட்டம் தாம் அண்மையில் நடத்திய

[2] முன் கொணர்வு: IFSP 2000 DER 2000, உலக வங்கி 2000
[3] முன் கொணர்வு: DPS. 2000. புனர்வாழ்வு செய்காரிய திட்டம். திருகோணமலை: மாவட்ட திட்டமிடல் செயலகம்.

ஆய்வுகளின் மூலம் வெளிப்படுத்தியது. விடுவிக்கப்படாத பகுதிகளில் வாழும் தமிழ்க் குழந்தைகள் மத்தியிலேயே மந்த போஷாக்கு மிகவும் சாதாரணமாக காணப்படுகிறது. திருகோணமலையில் வசிக்கும் குடும்பங்களினுடைய வருமானங்கள் மீதும் அவர்களுடைய ஜீவனோபாய வாய்ப்புகள் மீதும் யுத்தம் ஏற்படுத்தும் பாதகமான தாக்கத்திற்கு இது ஒரு தெளிவான சான்றாகும். தினக்கூலி வேலை, சிறிய அளவிலான விவசாயம், மீன்பிடித் தொழில் ஆகியவற்றில் தங்கியுள்ள குடும்பங்களே குறிப்பாக பாதிக்கப்படுகின்றன. பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களினுடைய பாதிப்புறுதன்மை விஷேடமாக தெளிவானது. இந்த மோசமான நிலையினை மேலும் பாதிப்பதாக குடும்பங்களினுள்ளே உணவு பங்கிடும் முறையானது, கலாச்சார காரணங்களால் பெண்கள் பொருத்தமான உணவு உண்பதில் பாகுபாடு காண்பிக்கப்படுவதை காட்டுகிறது. அகதிமுகாம்களிலிருந்து தமது சொந்த கிராமங்களுக்கு அண்மையில் திரும்பிய அநேக குடும்பங்கள் தமக்கென போதிய ஜீவனோ பாயங்களில்லாமல் உள்ளனர்.

வட-கிழக்கு மாகாணத்தில், மோதலிற்கு முன்பிருந்த சனத்தொகையில் மூன்றில் இரண்டு பங்கினர் தமது ஜீவனோபாயத்திற்கு பண்ணைத் தொழில், கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்பிடித் தொழில் ஆகியவற்றில் தங்கியிருக்க, இம்மாகாணத்தினுடைய பொருளாதாரத்தில் முக்கிய பங்கினை எக்காலத்திலும் வகிப்பது விவசாயம் ஆகும். 1980 களின் நடுப்பகுதிவரை இந்தப் பிரதேசமே விவசாயத் துறையில் நாட்டின் அநேகமான ஏனைய பிரதேசங்களை விட அதி முன்னேற்றமடைந்து இருந்தது. இங்கு உற்பத்தி செய்யப்படும் அரிசி எப்போதுமே மாவட்டத்தின் தேவைக்கு மேலதிமாகவே இருந்து வருகின்ற வேளையில், மரக்கறிவகை, பழவகை மற்றும் ஏனைய பணப்பயிர்கள் ஆகியவற்றின் உற்பத்தியில் இந்த மாவட்டம் ஒரு ஒப்பீட்டளவிலான மேலாதிக்கத்தைப் பெற்றிருந்தது. 1980 களின் நடுப்பகுதியிலிருந்து இப்பிரதேசத்தில் விவசாய உற்பத்தியும் குடும்ப வருமானங்களும் கணிசமான அளவு வீழ்ச்சியுற்றன. முழுமையாக விவசாயத்திற்கென பயன்படுத்தப்பட்ட காணியின் அளவு அங்குள்ள மொத்தக் காணியின் 44% த்திலிருந்து 36% மாக குறைந்தும், நெற்பயிற்செய்கைக்கு பயன்படுத்தப்பட்ட காணியின் அளவு 17% த்திலிருந்து 9% மாக குறைந்ததும் என அரசாங்க மூலங்கள் கணிப்பிடுகின்றன. இந்த இரு வீழ்ச்சிகளும் 1983-1999 காலப்பகுதியில் நடைபெற்றன. பெருந்தொகையான விவசாயிகளின் இடம்பெயர்வு (NEIAP), பெருமளவிலான விவசாயக் காணிகள் விடுவிக்கப்படாத பகுதிகளில் உள்ளமை, மோதலின் காரணமாக எழுந்துள்ள உயர்ந்த அபாய நிலையால் விவசாயம் செய்வதில் ஏற்பட்டுள்ள அச்சநிலை மற்றும் நீர்ப்பாசன வசதிகளில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி ஆகியனவே இந்த வீழ்ச்சிகளுக்கு பிரதான காரணிகளாக உள்ளன என நம்பப்படுகிறது.

## 4 விடய ஆய்வுகள்: திருகோணமலையில் ஜீவனோபாயங்கள், பாதிப்புறுதன்மை மற்றும் ஈடுகொடுத்தல்

*மூலப்பொருளும் செய்முறைகளும்:*

2001 ஆம் ஆண்டு கோடைகாலத்தில் ஒரு பல்துறை நிபுணத்துவம் படைத்த ஜேர்மனி - இலங்கை நாடுகளைச் சேர்ந்த ஆய்வுக் குழுவினர் திருகோணமலை மாவட்டத்திலுள்ள மேதலினால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்திலே அமைந்துள்ள நான்கு இடங்களிலே சமூக-பொருளாதார ஜீவனோபாய உத்திகளைப் பற்றிய ஆராய்வினை மேற்கொண்டது. இந்த

ஆய்வு, GTZ ஆதரவிலான ஒருங்கிணைக்கப்பட்ட உணவுப் பாதுகாப்பு செயற் திட்டத்தினால் (IFSP) ஏற்பாடு செய்யப்பட்டு, பேர்ளின் நகர ஹம்போல்ட் பல்கலைக்கழகத்தின் விவசாய, கிராம அபிவிருத்தி உயர்தர பயிற்சி நிலையத்தின் கூட்டுடன் நடத்தப்பட்டது. IFSP தனது கிராம செயற்திட்டங்களை எவ்விதம் மேலும் திறமையாக இனங்காண்பது என்பது பற்றியும் கிராம செயற்திட்டங்களின் பலாபலன்களை மேலும் எவ்விதம் உயர்த்துவது என்பது பற்றியும் அதற்கு ஆலோசனை வழங்குவதை இந்த ஆராய்ச்சி குறிக்கோளாக கொண்டிருந்தது. அவதானிப்பு/பரிசோதனை மூலம் நடத்தப்பட்ட இந்த ஆய்வானது (empirical studies), இலங்கை அரசாங்கத்திற்கும் LTTE யினருக்கும் இடையே ஏறபட்டுள்ள யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கு முன்னர் இருந்த ஒரு காலகட்டத்தில் நடத்தப்பட்டபடியால் அது வட-கிழக்கு மக்களுடைய யுத்தகால ஜீவனோபாய உத்திகளை பிரதிபலிக்குமே தவிர வட-கிழக்கில் வாழுகின்ற குடும்பங்களினதும் தனிநபர்களினதும் உண்மையான (அதாவது யுத்தத்திற்குப் பிந்திய) ஜீவனோபாயங்களை குறிப்பதாக அமையாது.

ஆராய்ச்சி நடைபெற்ற நான்கு இடங்களும் எல்லைக் கோட்டுப் பகுதியில், விடுவிக்கப்படாத பகுதிகளுக்கும் விடுவிக்கப்பட்ட பகுதிகளுக்கும் இடையில் அல்லது வேறுபட்ட இனங்களின் குடியிருப்புகளுக்கும் இடையே அமைந்துள்ளன. விடுவிக்கப்படாத பகுதிகள் என்பது தமிழ் போராளிக் குழுவினரது – தமிழீழ விடுதலைப் புலிகள் (LTTE) –கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் பகுதிகளாகும். மிக சமீப காலத்திற்கு முன்னர், இந்தப் பகுதிக்குள் செல்வதென்றால் அதற்கான அனுமதியை பாதுகாப்பு அமைச்சிடமிருந்து (MOD)




மூலம்:**Korf et al., 2001; தரைப்படம்:Christine Schenk**

பெறவேண்டியிருந்தது. எல்லைக் கோட்டுப் பகுதியில் இரு பகுதியினருக்குமிடையில் அடிக்கடி நிகழும் சண்டைகள், வன்முறைகள், ஆயுதம் தரித்த இரு பகுதியினரதும் பிரசன்னம் மற்றும் அச்சுறுத்திப் பணியவைத்தல் ஆகியன அடிக்கடி நிகழும் சாதாரண நிகழ்வுகளாகும்.

வேறுபட்ட வறுமை மட்டங்கள், விவசாய-சூழல் கொத்தணிகள் மற்றும் இன அடிப்படை ஆகியவற்றை தெரிவுக் காரணிகளாகக் கொண்டு IFSP யின் நெருங்கிய ஆலோசனையுடன் தெரிவுசெய்யப்பட்ட இந்த இடங்கள் IFSP ஏற்கனவே பணிகளை மேற்கொண்டிருக்கும் கிராமங்களையும் புதிய கிராமங்களையும் உள்ளடக்குகின்றன. துரித கிராம கணிப்பீட்டினை (RRA) அடிப்படையாகக் கொண்ட தர ஆராய்ச்சி முறைகளை இந்த ஆய்வு அதிகமாக

பயன்படுத்தியமை. தனிநபர்களுடன் இயல்பான நேர்காணல்கள், தெரிந்தெடுக்கப்பட்ட குழுவினருடான கலந்துரையாடல்கள், கிராம உலாக்கள் ஆகியவற்றை ஆய்வுக் குழுவினர் நடத்தி மற்றும் பொருத்தமான இடங்களில் RRA உத்திகளையும் பயன்படுத்தினர். இந்த ஆய்வுக்கு அவசியமான செயல்முறை சம்பந்தமான பின்னணியை DFID ஜீவனோபாய தொகுதி வடிவம் வழங்கியது.

இந்த தர ஆய்வு, ஆராய்ச்சிக் குழுவினரை கீழ்வரும் பணிகளை மேற்கொள்ள வழிவகுத்தது:

(1) ஒவ்வொரு ஆராய்ச்சி இடத்திலுமுள்ள வேறுபட்ட குடும்பக்களுக்கான ஜீவனோபாய தொகுதி மாதிரிகளை உருவாக்கல் (மாதிரியை நிரப்பல்).

(2) நான்கு விடய ஆய்வுகளிலும் இருந்து பொதுவானதும் முரண்பாடுடையதுமான ஜீவனோபாய உத்தி வகைகளை பெறல்,

(3) ஜீவனோபாய உத்திகளை ஒரு முத்தூண் மாதிரியின் படி வகைப்படுத்தல்:

  (i) *சொந்த உயிராபத்து முகாமைத்துவம்* மக்கள் தமது சொந்த உயிருக்கு ஏற்படக்கூடிய எதிர்மறையான விளைவுகளுக்கு எவ்வாறு முகம் கொடுக்கிறார்கள் என்பதை ஆராய்கிறது.

  (ii) *குடும்ப பொருளாதாரநிலை முகாமைத்துவம்* ஒரு குடும்பத்தினுள்ளே முதன்மை ஆதனங்களை ஒழுங்குபடுத்துவதற்கான நானாவித தந்திரோயங்களை இனங்காண்கிறது (முதன்மை ஆதனங்கள்).

  (iii) *வெளிவாரி உதவியைப் பெற்றுக் கொள்ளல்* எவ்வாறு தனிநபர்கள் அல்லது சமூகங்கள், கட்டமைப்புகளையும் செயன்முறைகளையும் பயன்படுத்துகின்றனர் என்பதை, அதாவது, அவர்கள் எவ்வாறு அரசியல் ஆளணியினரிலும் இராணுவ ஆளணியினரிலும் செல்வாக்கு செலுத்துகிறார்கள் அல்லது அவர்களுடன் தொடர்புகளை வைத்துக் கொள்கிறார்கள் என்பதைப்பற்றி விவாதிக்கிறது.

(4) ஈடுகொடு தந்திரோபாயங்களை (coping strategy) மாற்றி அமை தந்திரோபாயங்களில் இருந்து (adapting strategies) வேறுபடுத்தல்.

இந்த பகுத்தாய்வினை தொடர்ந்து அடுத்து வரும் பகுதியில் நாம் நடந்து முடிந்த ஆய்வின் மூலம் பெறப்பட்ட அனுபவ வாயிலான (empirical) பெறுபேறுகளை சுருக்கமாக தருகிறோம்: நான்கு விடய ஆய்வுகளுக்கும் ஒரு சுருக்கமான ஒப்பீட்டு அறிமுகத்தை வழங்கிய பின்னர், திருகோணமலை மாவட்டத்தில் விடுவிக்கப்படாத பகுதியில் அமைந்திருக்கும் ஒரு கிராமமாகிய இத்திக்குளத்தில் மேற்கொள்ளப்படும் ஒரு ஜீவனோபாய தொகுதியின் விடய ஆய்வை வழங்குகிறோம். இரண்டாவதாக, பல்வேறு ஜீவனோபாய உத்திகளின் பொதுவானதும் முரண்பாடானதுமான அம்சங்களைப் பெற்று அவற்றை முத்தூண் மாதிரியில் வர்க்கப்படுத்துகிறோம். மூன்றாவதாக நாம், ஜீவனோபாய உத்திகளில் சமூக, அரசியல் முதல்கள் வகிக்கும் பாத்திரம், வறுமை, மோதல் ஆகியவற்றிற்கான பிரதியுத்தரங்கள் (responses), ஈடுகொடு உபாயங்கள், மாற்றி அமை தந்திரோபாயங்கள் ஆகியவற்றை வேறுபடுத்த முயற்சி செய்கையில் ஏற்படும் விளைவுகளை விவாதிக்கிறோம். ஆய்வுகள் நடத்தப்பட்ட இந்த நான்கு இடங்களிலும் மேற்கொள்ளப்படும் ஜீவனோபாய உத்திகளிலும்

மீளும் தன்மையிலும் (resilence) காணப்படும் வெளிப்படையாக தெரியும் வேறுபாடுகளை அனுமானிப்பதற்கும் இந்த பகுத்தாய்வு எமக்கு வழிகோலும்.

*நான்கு விடய ஆய்வுகள்: வேறுபாடுகளும் பொதுவான அம்சங்களும்*

ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்ட இந்த நான்கு இடங்களும் விவாசாய சூழல், பொருளாதாரம், சமூக மற்றும் கலைச் சொற்கள் (அட்டவணை 1 ஐப் பார்க்கவும்) ஆகியவற்றில் பேணப்படும் வேறுபாடுகளை பிரதிபலிக்கின்றன. நான்கு விடய ஆய்வுகளும் விடுவிக்கப்படாத பகுதிகளுக்கும் விடுவிக்கப்பட்ட பகுதிகளுக்கும்[4] இடையேயுள்ள எல்லைக் கோட்டில் அல்லது அதற்கு அண்மையில் அமைந்துள்ளன. அடிக்கடி நிகழும் மோதல்கள், வன்முறைகள், அச்சுறுத்தி பணியவைத்தல் மற்றும் இருபகுதி ஆயுதக் குழுவினரின் பிரசன்னம் ஆகியவை மூலம் அதிகரித்துள்ள அடிக்கோட்டு பாதிப்புறுதன்மையை (baseline vulnerability) இது எடுத்துக் காட்டுகிறது. இவ்வாறாக குடும்பங்கள், பொருளாதார வாய்ப்புகளை வீழ்ச்சியடையச் செய்வதும் முதலீட்டு தெரிவுகளின் மீது செல்வாக்கு செலுத்துவதுமான ஒரு உயர்ந்த அபாயநிலைக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளன. இந்த நிலையில் ஏற்படும் உளரீதியான தாக்கங்கள் கணிசமானவை: தன்னம்பிக்கை இழத்தல், தம்மை வெளிப்படுத்திக் கொள்ளாமல் இருப்பதற்கு உந்தப்படல், மட்டுபடுத்தப்பட்ட ஜீவனோபாய வாய்ப்புகளால் ஏற்படும் விரக்தி மனப்பான்மை, பயம் மற்றும் நம்பிக்கையிழந்த மனப்பாங்கு ஆகியன பாதிப்புறுதன்மை அதிகரித்துள்ள இந்தப்பகுதியில் மிகச் சாதாரணமாகும். இவ்வாறாக, இந்த நான்கு இடங்களிலும் பொதுவாக காணப்படும் விஷேட அம்சம் ஸ்திரமின்மையாகும்.

எவ்வாறாயினும், மோதல், யுத்தம், அபாயநிலை ஆகியன இந்த நான்கு ஆய்வு இடங்களிலும் மிகவும் வேறுபட்ட விதத்திலான தாக்கங்களை கொண்டுள்ளன (அட்டவணை 1). சில இடங்களில், இடைஞ்சல்கள், கட்டுப்பாடுகள் ஆகிய புறநிபந்தனைகளின் மத்தியிலும் கிராமத்தினர் தமது பாரம்பரிய ஜீவனோபாய செயற்பாடுகளை இன்னும் மேற்கொள்கின்றனர். ஏனைய இடங்களில், நடைபெற்றுக் கொண்டிருக்கும் மோதலினால் மக்கள் தமது பாரம்பரிய வளங்களையும் நிலங்களையும் விட்டகன்று செல்ல நிர்ப்பந்திக்கப்பட்டு வேறு இடங்களில் மாற்றீடான ஜீவனோபாயங்களை தேடிக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகினர். விடுவிக்கப்படாத பிரதேசத்திலுள்ள (அதாவது போராளிகளின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட பகுதி) தமிழ்க் கிராமமாகிய இத்திக்குளத்தில், விவசாயிகள் தமக்கு ஏற்பட்ட பாதுகாப்பு அச்சுறுத்தலை புதிய ஜீவனோபாயங்களுக்கான வாய்ப்புகளாக மாற்றியுள்ளனர்: தமது பாரம்பரிய நெற்காணிகளை கைவிட்டு அகன்ற கிராமத்தினர் தற்போது மேட்டுநிலப் பயிர்ச்செய்கையிலும் கூலித்தொழிலிலும் ஈடுபட்டு கணிசமான அளவு பணவருவாயை சம்பாதிக்கின்றனர். பாரம்பரிய குத்தகை நெற்பயிர்ச் செய்கையாளராக இருந்து அவர்கள் பெற்ற வருமானத்தோடு ஒப்பிடுகையில் இது அவர்களை ஒரு உயர்ந்த பொருளாதார நிலையில் வைத்துள்ளது. எல்லைக் கோட்டில் அமைந்துள்ளதன் மூலம் போராளிகளின் அடிக்கடி தாக்குதல்களுக்கு ஆளாகியிருக்கும் ஒரு சிங்களக் கிராமமாகிய கல்யாணபுரவில்

---

[4] ‘விடுவிக்கப்படாத’ பகுதி என்பது தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் அமைந்திருக்கும் பிரதேசங் களைக் குறிக்கும். அண்மையில் கைச்சாத்திடப்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கு முன்னர், இப்பகுதிகளுக்கு செல்வதானால் பாதுகாப்பு அமைச்சின் முன் அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும். என்றாலும், திருகோணமலையில், மாறாத ஸ்திரமின்மை மற்றும் இங்குமங்குமாக நிகழும் வன்முறைகள் ஆகியவற்றைப்

வசிக்கும் கிராமத்தினர், படையினர் காவற்துறையினர் மற்றும் மத்திய அரசாங்கம் ஆகியவற்றின் ஆதரவு மூலம் ஒரு நலிவான செழுமையை அடையக்கூடியவர்களாக உள்ளனர். உத்தியோபூர்வமாக 'விடுவிக்கப்பட்ட' பிரதேசமான, கும்புறுப்பிட்டி என்னும் தமிழ்க் கிராமத்தில் வசிக்கும் கிராமத்தினர், தமக்கு ஏற்பட்ட முதலீட்டு இழப்பாலும் (இடம்பெயர்வால் ஏற்பட்ட இழப்பு) எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய அபாயநிலையை தவிர்க்கும் மனப்பாங்காலும், தமக்கு உயர்தர இலாபத்தைத் தரக்கூடிய வெங்காய பயிர்ச்செய்கையில் ஈடுபட தயக்கம் காட்டுகின்றனர். கடற்படையினருக்கும் போராளிகளுக்கும் சரியாக இடைநடுவில் வட்டம் என்னும் மூஸ்லிம் மீன்பிடிக் கிராமம் அமைந்துள்ள காரணத்தால், மோதலில் ஈடுபட்டுள்ள இருபகுதியினருக்கும் தம்மை வெளிப்படையாக காட்டிக் கொள்ளாமல் இருப்பதையே அங்கு வசிக்கும் முஸ்லிம் கிராமத்தினர் விரும்புகின்றனர். இந்த நான்கு உதாரணங்களும், அங்கு நிலவும் சூழ்நிலைகளுக்கு அமைய பல்வேறு வகையான சூழல்களையும் பிரதியுத்தரங்களையும் (responses) காட்டுவதால் ஆய்வின் மூலம் பெறப்பட்ட கண்டுபிடிப்புகளை பொதுவாக்குவது மிகக் கடினமாயுள்ளது. எவ்வாறாயினும், நான்கு இடங்களுக்கும் பொதுவான ஜீவனோபாய உத்திகளும் இருக்கும் அதே வேளை, ஏனையவை ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்கு ஜீவனோபாய உத்திகளிலும் பெறுபேறுகளிலுமுள்ள இந்த பல்வேறுதன்மை, பாதிப்புறு சூழலினுடைய சிக்கலான நிலைமையை எடுத்துக் காட்டுவதோடு அது மோதலினால் மாத்திரமே உருவமைப்புப் பெற்ற ஒன்றாக புரிந்து கொள்ளமுடியாது என்பதையும் காட்டுகிறது. சரியாகக் கூறுவதானால் பாதிப்புறு சூழலானது ஒன்றின் மேல் ஒன்று ஆதிக்கம் செலுத்தும் பல்வேறுபட்ட காரணிகளின் விளைவுகளேயாகும். ஒரு குடும்பத்தினுடைய அல்லது ஒரு சமூகத்தினுடைய முதன்மை ஆதனங்களைப் பொறுத்து இதனுடைய தாக்கம் வேறுபடும். விடய ஆய்வு அது நடத்தப்பட்ட ஒவ்வொரு இடத்தினதும் சிக்கல்நிலையை அழுத்திக் கூறுவதற்கு மாத்திரமே பொருத்தமாயிருக்கும் பகுதியிலுள்ள ஒரு கிராமமாகிய இத்திக்குளம் விடய ஆய்வை நாம் தெரிவு செய்தோம்.

| | இத்திக்குளம் [இ] | கல்யாணபுர [க] | கும்புறுப்பிட்டி [கு] | வட்டம் [வ] |
|---|---|---|---|---|
| பாதிப்புறு சூழல் | விடுவிக்கப்படாத பகுதியிலிருக்கும் தமிழ் சமூகம்; அழிவுண்ட பொது உள்ளகக் கட்டமைப்புகள் | சிங்கள எல்லைக் கிராமம் | 'மிகுதி விடுவிக்கப்பட்ட' பிரதேசத்திலுள்ள தமிழர் குடியிருப்பு; அமோக வெங்காய விளைச்சல் | கரையோர பிரதேசத்தில் இருக்கும் முஸ்லிம் எல்லைக் கிராமம் |
| பிரதான வருவாய் மார்க்கங்கள் | மேட்டுநிலப் பயிர்ச்செய்கை, கூலித் தொழில் | நெற்பயிர்ச் செய்கை, ஊர்காவற் படையினர், கூலித் தொழில் | கூலித் தொழில், வெங்காயப் பயிர்ச்செய்கை, காணிக் குத்தகை | மீன்பிடித் தொழில், மத்திய கிழக்கு வேலை வாய்ப்பு |
| பிரதான நடைமுறை | அச்சுறுத்தல்களை வாய்ப்புகளாக மாற்றுதல் | அதிகாரத்தின் ஓரத்தில் நலிவான செழுமை | அபார வெங்காய விளைச்சலை தவறவிடல் | எல்லைக் கோடுகளுக்கு இடையே நெருக்கப்படுத்தல் |

அட்டவணை 1: கிராம சுருக்கக் குறிப்புகள் (Korf et al.,2001 இலிருந்து தொகுக்கப்பட்டவை)

---

பாறுத்து அனேக பகுதிகள் 'சாம்பல்' அல்லது 'அரை-விடுவிக்கப்பட்ட' சர்ச்சைக்குரிய பிரதேசங்களாக இருந்தன.

*விடய ஆய்வு: இத்திக்குளம் - விடுவிக்கப்படாத பகுதியிலுள்ள கிராமம்* [5]

இத்திக்குளத்திலிருந்து மூன்று கிலோமீற்றர் தொலைவிலுள்ள ஒரு புராதன கிராமமாகிய ஸ்ரீனிவாசபுரம் கிராமத்திலிருந்து இடம் பெயர்ந்த கிராமத்தினரால் உருவாக்கப்பட்ட இத்திக்குளம் கிராமம், சரியாக, விடுவிக்கப்படாத பகுதியின் எல்லையில் அமைந்துள்ளது. 1985 ஆம் ஆண்டிற்கு முன்னர் - கிராமத்தினர் தமது பூர்வீக கிராமத்தில் வசித்தபோது – விடுவிக்கப்பட்ட பகுதியில் அமைந்திருக்கும் காணிகளில் குத்தகை விவசாயிகளாக நெற்பயிர்ச் செய்கையை மேற்கொண்டிருந்தனர். 1985 ஆம் ஆண்டு, ஸ்ரீனிவாசபுரம் கிராமத்திற்கு அருகில் ஆயுதப் படையினர் ஒரு இராணுவ முகாமை அமைத்தனர். இதன் பின்னர் ஆயுதப் படையினருக்கும் LTTE யினருக்கும் இடையே அடிக்கடி மோதல்கள் நிகழத் தொடங்கின. ஒவ்வொரு தாக்குதலின் போதும் கிராமத்தினர் தற்காலிக இடம் பெயர்வுகளை மேற்கொள்வதும் சிறிது நாட்களின் பின்னர் தமது கிராமத்திற்கு திரும்புவதுமாயும் இருந்தனர். விடுவிக்கப்பட்ட பகுதியிலுள்ள தமது காணிகளில் கிராமத்தினர் விவசாயத்தை மேற்கொள்வதற்கு பல சோதனைச்சாவடிகளை அவர்கள் தாண்டிச் செல்லவேண்டியிருந்ததால் கிராமத்தினருக்கு ஏற்பட்ட கஷ்டநிலைமை மேலும் மோசமாகியது.

இந்த பாதுகாப்பற்ற வாழ்க்கைநிலை காரணமாக இக்கிராமத்தில் வாழ்ந்த அதிகமானோர் தமது ஜீவனோபாயத்தை மேற்கொள்வதற்காக இத்திக்குளம் கிராமத்திற்கு சென்று அங்கு மழைநீரை நம்பிய மேட்டுநிலப் பயிர்ச்செய்கையிலும் வேறு வருமானம் ஈட்டும் செயற்பாடுகளிலும் ஈடுபடத் தொடங்கினர். ஸ்ரீனிவாசபுரத்திற்கு திரும்பவும் வந்து வெறுமையான வீடுகளில் மீண்டும் குடிபுகுமாறு படையினர் இடம் பெயர்ந்த கிராமத்தினருக்கு அழைப்பு விட்டிருந்தும், அங்கு நிரந்தரமான வீடுகளைக் கொண்டவர்கள் மாத்திரம் திரும்பினர். சமூகத்தில் மிகவும் வறுமை நிலையில் இருந்தவர்கள் இத்திக்குளத்திலேயே தங்கிவிட்டனர்.

கிராமத்தினுடைய பாதிப்புறு சூழல் இரண்டு பிரதான காரணிகளால் உருவாக்கப்பட்டுள்ளது: பயத்தையும், விரக்தியால் எதையும் செய்யத் துணிதல் நிலையையும் உருவாக்கி, மக்களினதும் பொருட்களினதும் எளிதில் நகரும் தன்மையை (mobility) கட்டுப்படுத்தியுள்ள, சண்டையில் ஈடுபட்டுள்ள இருபகுதியினரதும் பிரசன்னம் மற்றும் வெளிவாரி பொருளாதார ஆளணியிரில் தங்கியிருத்தல் ஆகியனவாகும். மறுபக்கத்தே, சுற்றுப்புறப் பகுதிகளிலுள்ள நீர்ப்பாசனத் திட்டங்கள், வயல்களில் கூலிவேலை செய்வதற்கான வாய்ப்புகளை அளிக்கின்றன. மக்கள் எவ்வாறு தமது குடும்ப வளங்களை (5 முதன்மை ஆதனங்கள்) ஒன்றிணைத்து ஜீவனோபாய உத்திகளை மேற்கொள்ள முடியும்?

சடுதியாக மோசமடையும் பாதுகாப்பு நிலைமையை கையாளக்கூடிய ஈடுகொடு தந்திரோபாயங்களையும் நீண்டகால நடைமுறைகளையும் மாற்றியமையை தந்திரோபாயத்துடன் நாம் சம்பந்தப்படுத்த முடியும். ஒரு பிரதான விவசாய செயற்பாடாகவும் வருமான மார்க்கமாகவும் விவசாயக் குடும்பங்கள் பலதரப்பட்ட மேட்டுநிலப் பயிர்களை பயிரிடுகின்றனர். தரப்பட்ட சூழ்நிலையில் இது பல சாதக அம்சங்களைக் கொண்டுள்ளது. விடுவிக்கப்படாத பகுதிகளில் நிலவும் அதிகரித்த அடிக்கோட்டு பாதிப்புறுதன்மைக்கு (baseline vulnerability) ஏற்றவாறு கிராமத்தில் வாழும் குடும்பங்கள் எவ்வாறு தம்மை மாற்றியமைக்கின்றன

[5] மேலதிக விபரங்களுக்கு Ziebell மற்றும் Ziegler 2001 ; Korf et al. 2001 ஐப் பார்க்கவும்

என்பதையும் இது காட்டுகிறது: மேட்டுநிலப் பயிர்ச்செய்கைக்கு குறைந்த முதலீடு மாத்திரமே தேவையாகும். இதனால் கடன்களிலே தங்கியிருக்கும் நிலைமையை இது குறைக்கின்றது. இத்தகைய கடன்கள் கடும் நிபந்தனையின் பேரிலேயே வழங்கப்படுகின்றன (கடுமையான வட்டி அல்லது வர்த்தகர்களில் தங்கியிருத்தல்). இவ்வகையான குறைந்த முதலீட்டுடன் செய்யப்படும் மேட்டுநிலப் பயிர்ச்செய்கை மூலம் மக்கள் தமக்குத் தேவையான உணவையும் பயிர்ச்செய்கைக் காலமாகிய ஐந்து மாதங்களிற்கும், ஒரு நடுத்தரமான ஆனால் நம்பகமான வருமானத்தையும் பெறுவதை உறுதிப்படுத்திக் கொள்கின்றார்கள். மேலும் குடும்பங்கள் தமது வருவாயைப் பெருக்கிக் கொள்வதற்காக வருவாயைப் பெற்றுத் தரக்கூடிய வேறு செயற்பாடுகளிலும் ஈடுபடுகிறார்கள், குறிப்பாக, அயலிலுள்ள விடுவிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள வயல்நிலங்களில் கூலித்தொழில் புரிதல். இதன்மூலம் இவர்கள் தமது பணவருவாயையும் கூலியாக நெல் பெறுவதையும் கூட்டிக் கொள்கிறார்கள். மேட்டுநிலப் பயிர்ச்செய்கையானது குடும்ப அங்கத்தினர் தொழிலுக்குச் செல்லும் முறைமையில் ஒரு போதுமான நெகிழ்ச்சிப் போக்கை கடைப்பிடிக்க வழிசெய்கிறது ஏனெனில் பெண்கள், சிறுவர்கள் போன்றோரும் இங்கு வேலையில் ஈடுபடுகிறார்கள். இந்த வசதி நெற்பயிர்ச் செய்கையின்போது கிடைப்பது அசாதாரணம்.




<u>வடிவம் 3: இத்திக்குளம் கிராமத்தின் ஜீவனோபாய தொகுதி (மூலம்: Korf et al. 2001)</u>

திடீர் அதிர்ச்சிகளின் போதும் பாதுகாப்பு நிலைமைகள் சீர்குலையும் போதும் எவ்வாறு கிராமத்தினர் அந்த நிலைமைகளுக்கு ஈடுகொடுக்கிறார்கள்? பதட்டமான காலங்களில் சில குடும்பங்கள் தமது பயிர்ச்செய்கை முறையை மாற்றி சோளம் பயிரிடுகின்றனர். ஏனெனில், சோளத்தை இலகுவில் சேமித்து வைக்க முடிவதால் அவர்களால் வெளிச் சந்தைளுக்கு செல்ல முடியாத நிலைமைகளில், இந்த தாழ்ந்த நிலையில் கூட, வருடம் முழுவதும் அவர்கள் உயிர் வாழ்வதற்கு போதுமான உணவை அது உறுதிசெய்கிறது. எல்லைப்

புறத்திற்கு அப்பால் இருக்கும் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள சந்தைக்கு ஆண்கள் செல்லாமல் பெண்களை அனுப்புதல் இன்னுமொரு ஈடுகொடு உபாயமாகும். ஆயுதப் படையினரால் ஆண்கள் துன்புறுத்தல்களுக்கு ஆளாகும் பீதியினாலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. பதட்ட சூழ்நிலைகளில் கூட உயிர்வாழ்வதற்கு தேவையான அடிப்படைப் பொருட்களை குடும்பங்கள் பெற்றுக் கொள்வதற்கு இந்த ஈடுகொடு உபாயங்கள் வழியமைக்கின்றன போலுள்ளது.

தமது ஜீவனோபாய செயற்பாடுகளை மேற்கொள்ளுவதற்காக, அநேக சந்தர்ப்பங்களில் முன்நிபந்தனையாக, வரி வடிவத்திலோ அல்லது இலஞ்ச வடிவத்திலோ ஆயுத ஆளணியினர் வற்புறுத்திக் கோருவதற்கு முகம் கொடுக்கவேண்டியவர்களாக கிராமத்தவர்கள் உள்ளனர். சாதாரணமாக இத்திக்குளம் கிராமத்தவர்கள் இத்தகைய கோரல்களை நிறைவேற்றி அதன் விளைவாக குறைந்த இலாபத்தினையே பெறுகிறார்கள். இத்திக்குளத்தில் சமூக, அரசியல் முதல்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன என்பதை அவதானிப்பது அத்தியாவசியமாகும். ஸ்தாபனங்கள், வெளிவாரி மூலதனங்கள் ஆகியவற்றினுடைய சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கென ஒரு சமூக அடிப்படையிலான அமைப்பு (CBO) இந்தக் கிராமத்தில் இயங்குவதில்லை. சமூக அல்லது சமய சம்பந்தமான விடயங்களிறகு ஊக்கம் கொடுத்து, அதன் மூலம் இந்த சமுதாயத்திலே ஒரு சமூக வலைப்பின்னலை உருவாக்குவதற்கான அடித்தளத்தினை இடுவதற்கு ஏதுவாக ஏதேனும் ஸ்தாபிக்கப்பட்ட சமூக அல்லது சமய அமைப்பு இங்கு இருப்பதாக தெரியவில்லை. மேலும், இத்திக்குளம் கிராமத்தினர் அரசியல்வாதிகளுடனோ அல்லது அதிகாரங்களை தம்வசம் வைத்திருப்பவர்களுடனோ எதுவித தொடர்புகளும் அற்றவர்களாக உள்ளனர்.

## பெட்டி 2: விடுதலைப்புலிகள் (LTTE) வகிக்கும் பாத்திரம்

சட்டம், அமைதி ஆகியவற்றினுடைய சீர்குலைவை நிவர்த்தி செய்யும் முகமாக LTTE தமது சொந்த சட்ட ஒழுங்கு முறைகளை உருவாக்கியுள்ளனர். கிராமத்தில் ஏதேனும் பிரச்சனைகள் ஏற்படுமாயின் கிராமத்தினர் அவைகளை இலங்கை காவல்துறையினரிடம் கொண்டு செல்லாமல் LTTE யினரிடமும் அவர்களுடைய நீதிமன்றத்திடமும் ஒப்படைப்பர். அவர்களுடைய சட்ட ஒழுங்கின் பிரகாரம் விசாரணை, கைது, தீர்ப்பு, சிறைத் தண்டனை ஆகியன நிறைவேற்றப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக இயற்கை வளங்களான வனம், மரப்பலகை, மண், மற்றும் காணி அத்துடன் உடைத்தெடுக்கப்பட்ட கல் (rubble) ஆகியவற்றின் மீதும் தடைகள் உண்டு.

இயற்கை வளங்களை (உ+ம். வனம்) சுரண்டுவதற்கான அனுமதிப்பத்திர முறையை LTTE யினர் அறிமுகப்படுத்தியுள்ளனர். இந்த வளங்களை பயன்படுத்துவதற்கு LTTE யினருக்கு கொடுப்பனவுகளை வழங்கவேண்டும். இத்துடன் செல்வந்தர்கள், அரச ஊழியர்கள், நெற்பயிர்ச்செய்கை விவசாயிகள், பெரிய அளவு கால்நடை வளர்ப்பாளர்கள், மாட்டு வண்டில் உரிமையாளர்கள் ஆகியோர் மீது வரிகள் சுமத்தப்பட்டுள்ளன.

காணிப்பாவனை உரிமைகளைப் பொறுத்து ஒரு சில விவசாயிகளே காணி உரிமைக்கான சட்டரீதியான ஆவணங்களை வைத்திருக்கிறார்கள். எவ்வாறாயினும் தமது காணியின் மீது வேறு எவரும் உரிமை பாராட்டமாட்டார்கள் என்றும் அவை பாதுகாப்பாக தமக்கே உரியதாக இருக்கும் என்றும் கிராமத்தவர் ஒரு முறைசார்பற்ற உறுதிமொழி மூலம் நம்பிக்கை வைத்துள்ளனர் ஏனெனில் கிராமங்களில் எவர் எந்தக் காணியை துப்புரவாக்கியது என்று

கிராமத்தவர் அனைவருக்கும் தெரிவதால் காணிப் பிரச்சனை ஏற்படும்போது அயலவர் காணி உரிமையைப் பற்றி சாட்சி கூறுவர் என்ற நம்பிக்கை அனைவருக்கும் உள்ளது.

இதே நேரத்தில் காணி சீதன கொடுமதிக்காக சம்பிரதாயமற்ற முறையில் துண்டாடப்படுகிறது. எவ்வாறாயினும், பயிர்ச்செய்கைக்காக காணி வெட்டித் துப்புரவு செய்தலை LTTE யினர் தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்துள்ளார்கள் என்றும் காட்டு வளங்களைப் பயன்படுத்துவது பற்றிய (உ+ம் விறகு சேகரித்தல்) சட்டதிட்டங்களை ஏற்படுத்தியுள்ளார்கள் என்றும் தகவல் தருவோர் தெளிவாக சுட்டிக்காட்டினர். ஆயினும், கிராமத்தினர் தமது காணிகளுக்கு அனுமதிப் பத்திரங்கள் பெறுவதற்கும் - காலக்கிரமத்தில் அவற்றை காணி உறுதியாக மாற்றுவதற்கும் பயிர்ச்செய்கை உத்தியோகத்தரை நாடுகின்றனர். காணி உறுதிப் பத்திரங்களை இருபகுதியினரிடமும் இருந்து பெற்றுக் கொண்டு எவர் எதிர்காலத்தில் அதிகாரத்தைக் கைப்பற்றினாலும் தமது காணி உரிமைக்கு பங்கம் வராமல் இவர்கள் பாதுகாத்துக் கொள்கிறார்கள் என்று புலப்படுகிறது.

இத்திக்குளம் கிராமத்தின் விடயத்தில், இங்கு வாழ்பவர்களால் தமக்கு வெளியிலிருந்து ஏற்படுத்தப்பட்ட அச்சுறுத்தலை (சண்டை) ஒரு புதிய பொருளாதார வாய்ப்பாக மாற்றக்கூடியதாக இருந்தது: மேட்டுநிலப் பயிர்ச்செய்கையின் மூலம் கிடைக்கும் வருமானம் மத்திமமான வருமானமாக இருந்தாலும் அது ஒரு நம்பகமான வருவாயை நிச்சயப்படுத்துகிறது. இந்த வருவாய் மூலம் சில கிராமத்தினரால் தமது நிதிமுதலை அதிகரித்து அதன்மூலம் தமது பூர்வீக கிராமத்தில் வீடுகள் கட்டுவதற்கு முதலிட முடிந்து இவ்வாறாக தமது சமூக, பௌதீக முதல்களை மீண்டும் உருவாக்க முடிந்துள்ளது. மறுபக்கத்தே, சுற்றுப்புறங்களிலுள்ள பாரம்பரிய கிராமங்களில் வாழும் குத்தகை பயிர்ச்செய்கையாளர்கள் தாம் பெற்ற பாதகமான கடன்கள், மேலும் அதிக செலவான உள்ளீடுகள் (விடுவிக்கப்படாத பகுதிக்கான போக்குவரவு) சந்தைப்படுத்தலுக்கான நிபந்தனைகள் (அண்மையிலுள்ள சந்தை நகரமான தோப்பூரிலுள்ள வியாபாரிகளினுடைய விலை நிர்ணயக் குழு) ஆகியவற்றின் காரணமாக தாம் மிகக் குறைந்த இலாபத்திலேயே பயிர்ச்செய்கையை மேற்காள்ளக்கூடியதாக இருப்பதாக முறையிட்டனர். பயிர்ச்செய்கையை மேற்கொள்ளும் அநேகமான வருடங்களில் கிடைக்கும் விளைச்சல் அன்றாட சீவியத்திற்கு மாத்திரமே போதுமானதாக உள்ள நிலையில் குடும்பங்களிற்கு தேவையான மேலதிக பணவருவாயை குத்தகைக்கு நெற்பயிர்ச்செய்கை செய்வோர் இதன்மூலம் ஈட்டுவது இயலாத காரியம்.

*ஜீவனோபாய உத்திகளின் மூன்று தூண்கள்*

நான்கு விடய ஆய்வுகளிலிருந்து பெறப்பட்டு முத்தூண் மாதிரியின்படி வகைப்படுத்தப்பட்ட நானாவித ஜீவனோபாய உத்திகளையும் அட்டவணை 2 சுருக்கமாக தருகிறது. முற்றுமுழுதாக, திருகோணமலையிலுள்ள குடும்பங்கள் மேற்கொள்ளும் ஜீவனோபாய உத்திகள், குறுகியகால ஈடுகொடு தந்திரோபாயங்களையும் (coping strategies) நீண்டகால மாற்றிஅமை தந்திரோபாயங்களையும் (adapting strategies) கொண்டவையாகும். அபாயநிலைகளைக் கொண்ட சூழலுக்கு ஏற்றபடி வாழ்வதற்காக தாம் இடத்துக்கு இடம் நகரும் தன்மையில் (mobility) மாற்றங்களை மேற்கொள்ளல் ஒரு பிரதான பிரதியுத்தரமாக

(response) உள்ளது என இந்த ஆய்வு காட்டுகிறது (முன் கொணர்வு: Goodhand et al., 2000). தமது சொந்த உயிருக்கு ஏற்படக்கூடிய அபாயநிலையை குறைப்பதற்காக பலவிதமான தந்திரேபாயங்களை மக்கள் பயன்படுத்துவதை எமது கண்டுபிடிப்புகள் காட்டுகின்றன. மேலும் பாதுகாப்பான இடங்களுக்கு குடியகல்வதிலும், தற்காலிகமாக அவர்கள் தமது குடும்பங்களை பிரிப்பதிலும் - அதாவது தமது பிள்ளைகளை பாதுகாப்பிற்காகவும் கல்விக்காகவும் தமது உறவினரிடம் அனுப்புதல் - ஒரு குறிப்பிடத்தக்க நெகிழ்ச்சித் தன்மையை அவர்கள் காண்பிக்கின்றனர். இந்த ஈடுகொடு உபாயங்களில் அநேகமானவை விரிவடைந்த குடும்ப வலைப்பின்னல் (extended family network) மீது பாரிய தேவைகளை ஏற்படுத்தி குடும்ப ஆதனங்களை படிப்படியாக வெறுமையாக்கும் நிலைக்கு இட்டுச் செல்கிறன. அநேகமாக இந்தக் காரணத்தினால்தான் கல்யாணபுர கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் தமது கிராமத்திற்கு வெளியிலே தங்கினாலும் பயிர்ச்செய்கைக் காலங்களில் கிராமங்களுக்குத் திரும்புவர். தமது பாரம்பரிய வாழ்க்கை முறைகளைக் கைவிட்டு வேறு ஜீவனோபாயங்களை மேற்கொள்வதற்கு அவர்களிடம் வேறு மார்க்கங்கள் குறைவு. தமது பாரம்பரிய வாழ்க்கை முறைகளை கைவிடுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டவர்கள் அநேக சந்தர்ப்பங்களில் வேறு ஜீவனோபாய வழிவகைகளை மேற்கொள்வதற்கு பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர்.

அநேக மாற்றிஅமை தந்திரோபாயங்கள், வீழ்ச்சியுறும் வருமான வாய்ப்புகளுக்கும் ஒப்பீட்டளவில் அமைதிச் சூழல் பகுதிகளிலும் பார்க்க சண்டை நடக்கும் பகுதிகளில் உயர்ந்து காணப்படும் முதலீட்டு அபாயநிலைகளுக்கும் ஈடுகொடுக்கின்றன. ஒவ்வொரு அரசியல் நெருக்கடிக்கும் பின்னர் குடும்பங்கள் தமது முதன்மை கையிருப்பை படிப்படியாக வெறுமையாக்குகின்றன. பயிர்ச்செய்கை மூலம் பணவருவாயை பெறுவதிலும் பார்க்க வெளியிடங்களிலிருந்து (ஊர்காவற் படையினருக்கு அரச கொடுப்பனவுகள், சேமலாபங்கள்) அல்லது வெளிநாட்டு வேலைவாய்ப்புகளிலிருந்து (வெளியிடங்களிலிருந்து அனுப்பப்படும் பணம்) மேலும் இலகுவாக பெறக்கூடியதாக உள்ளது. அரச தலையீடுகள் உள்ளூர் பொருளாதார நிலையை மேலும் விகாரப்படுத்துகின்றன: எல்லைப்புறக் கிராமங்களிலே பெருந் தொகையான சிங்கள விவசாயிகளை ஊர்காவற் படையினராக அரசாங்கம் நியமித்து அவர்களுக்கு நிலையான மாதாந்த வருமானங்களை வழங்குகிறது. உள்வரும் இந்தப் பாரிய நேரடி பணவருவாயானது உள்ளூர் மற்றும் பிரதேச மட்ட சமநிலையின்மையை (IFSP 2000) மேலும் அதிகரிக்கிறது. இத்தகைய வருமானம் எந்த வகையிலும் ஒரு நிலைத்திருக்கும் ஜீவனோபாய செயற்பாடல்ல. மாற்றிஅமை தந்திரோபாயங்கள், வளங்களுக்கான வீழ்ச்சியுற்றுக் கொண்டு செல்லும் உரித்துடைமைகளையும் (entitlement) - உ+ம் தாம் விரும்பிய ஜீவனோபாய மார்க்கங்களை தெரிவுசெய்வதை தடைப்படுத்துகின்ற காணிகள், நீர்நிலையங்கள், வனவளங்கள் ஆகியவற்றிற்கான போக்குவரத்து தடைப்படுதல் - பிரதிபலிக்கின்றன. தமது வாழ்வின் மூலாதாரங்களின் மீது தாக்கங்கள் புரியக்கூடிய எதிர்கால நிகழ்வுகளைப் பற்றி நிச்சயமற்ற நிலையிலிருக்கும் விவசாயக் குடும்பங்கள் நிலைத்திருக்கக்கூடிய காணி முகாமைத்துவத்தில் முதலிடுவது விவேகமானதல்ல. ஆகவே தாம் உயிர் வாழ்வதற்கு, வரக்கூடிய இழப்புகளை குறைத்து, பணம் சம்பாத்தியத்தின் மீதும் (விசேடமாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப்புகள் மூலம்) அரச சேமலாபங்களின் மீதும் / அல்லது அரச சேமலாபங்களின் மீது குறியாய் இருப்பதற்கு குடும்பங்கள் இடர்குறைப்பு தந்திரோபாயங்களை கையாளுகின்றனர்.

| தமது அபாயநிலையை முகாமைத்துவம் செய்தல் | குடும்ப பொருளாதாரத்தை முகாமைத்துவம் செய்தல் | வெளியிடத்து உதவிகளைப் பெறல் |
|---|---|---|
| *அபாயநிலையை வறிதாக்கல்*<br>• நிரந்தரமாக அல்லது தற்காலிகமாக வீட்டை அல்லது கமத்தை விட்டு வெளியேறல் [சகலரும்],<br>• திடீரென வெடிக்கும் மோதலால் வனத்திற்கு ஓடித் தப்புதல் (கல்),<br>• இலங்கையில் அமைதிச் சூழல் நிலவும் பகுதிகளில் வசிக்கும் உறவினருடன் தங்கியிருந்து கொண்டு பயிர்ச்செய்கைக் காலங்களில் மாத்திரம் வீடு திரும்புவது [கல்],<br>• பாதுகாப்பு காரணங்களுக்காகவும் கல்விக்காவும் மேலும் பாதுகாப்பான இடங்களிலுள்ள உறவினர்களிடம் பிள்ளைகளை அனுப்புதல் [சகலரும்],<br>• சோதனைச் சாவடிகள் வழியே சந்தைக்கு செல்லும்போது இளைய வயதினர் இம்சைக்கு ஆளாகக்கூடிய சந்தர்ப்பங்கள் கூடுதலாக இருப்பதால் பெண்களையும் வயோதிபர்களையும் அனுப்புதல் [இத்],<br>• கமங்களில் குழுவினராக நின்று வேலை செய்து படையினரின் பாதுகாப்பை நாடுவது [கல்],<br><br>*அபாயநிலையை விளைந்து எதிர்கொள்ளல் (பொருளாதார நிலைப்பிற்காக):*<br>• வனம் மிகவும் ஒரு அபாயகரமான இடமாக இருந்தபோதும் அங்கு சென்று விறகு சேகரித்தல்<br>• பெருமளவில் மீன் அகப்படக்கூடிய இடமென்றால் அது கடற்படையினரால் தடைபடுத்தப்பட்ட இடமாய் இருந்தாலும் அங்கு அத்துமீறிப் பிரவேசித்து மீன்பிடியில் ஈடுபடல் | *வருமானம் தேடல்:*<br>• வருமான வாய்ப்புகளிற்காக மத்திய கிழக்கு நாடுகளுக்கு குடியகலல் [சகலரும், வட்],<br>• ஜீவனோபாய மார்க்கங்கள் குறைவாகவுள்ளதால் பிரதான வருவாய் மூலங்களிலேயே தங்கியிருத்தல் [கல், கும், வட்],<br>• சிங்கள விவசாயிகள் ஊர்காவல் படை வேலைவாய்ப்பினை நாடுதல் [கல்],<br><br>*குடும்பத்தை ஒழுங்கமைத்தல்:*<br>• பாரம்பரிய ஆண், பெண்ணுக்குரிய பாத்திரங்களையும் கடமைகளையும் மேலும் நெகிழ்வுடன் கையாளுதல்: சந்தைக்கு செல்லுதல், வியாபாரம் மற்றும் பயிர்ச்செய்கை வேலைகளில் பெண்கள் மேலும் தீவிரமாக ஈடுபடல் [இத்],<br>• பாதுகாப்பு மற்றும் பொருளாதார தேவைகளின் நிமித்தம் குடும்பத்தை மீளளவு செய்தல் அல்லது மீளிணைத்தல், உ+ம் பாதிப்படையக்கூடிய குடும்ப உறுப்பினரை மேலும் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்புதல் [சகலரும்].<br><br>*செலவினத்தையும் முதலையும் முகாமைத்துவம் செய்தல்:*<br>• இரண்டு இடங்களில் மக்கள் புதிய வீடுகளை நிர்மாணிக்க ஆரம்பித்திருந்தாலும் [வட், இத்], தொட்டுணரக்கூடிய ஆதனங்களில் முதலீடு செய்வதை தவிர்த்தல் (உ+ம் படகுகள், வீடுகள்) [கும்],<br>• களியாட்டம் மற்றும் நுகர்வு முறைமைகளுக்கான செலவினங்களைக் குறைத்தல் [சகலரும]. சமூக அந்தஸ்திலிருந்து சிறிது மதிப்பிறங்கலோடு இது தொடர்புபடுத்தப்படுகிறது,<br>• சம்பிரதாயமற்ற உணவு சந்தைகளை பயன்படுத்தல் (சட்டவிரோதமாக பொருட்களைக் கடத்தல் மற்றும் சட்டவிரோத மதுபான தயாரிப்பு உட்பட). | *அதிகாரம் படைத்தவர்களுடன் கூட்டு (தீவிர):*<br>• உள்ளூரிலுள்ள அரச உத்தியோகத்தர்களுடன் நல்லுறவுகளை உண்டுபடுத்தல் [கல், கும், வட் ],<br>• சொந்த இலாபங்களை அடைவதற்காக ஆயத ஆளணியினரின் கூட்டுறவை நாடல் (உ+ம் வியாபாரத்திற்காக) [கல்],<br>• பிரச்சனைகளை உண்டு பண்ணாமல் இருப்பதற்காக தம்மை வெளிப்படுத்தாமல் இருத்தல் [இத், வட்].<br><br>*ஆயத ஆளணியினரின் கோரல்களை நிறைவேற்றல் (மந்தமான):*<br>• தேவையானவற்றை இலஞ்சமாக கொடுத்தல் (பலாத்காரத்தின் மூலம் பறிமுதல் செய்யப்படுவதை தவிர்க்கும் முகமாக) [இத், கும்],<br>• வரி செலுத்துவதையோ அல்லது இலஞ்சம் கொடுப்பதையோ தந்திரங்கள் முதலியவற்றின் மூலம் இயலுமானவரை தவிர்த்தல் [இத், கும்]<br><br>*அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகளைப் பெறுவதற்கு தகுதி பெறல்:*<br>• அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகளைப் பெறுவதற்கு சமூக அடிப்படையிலான அமைப்புகளை உருவாக்குதல் [கல்]. என்றாலும், உருவாக்கப்பட்ட அநேகம் உள்ளூர் நிறுவனங்கள், உள்ளூர் தலைவர்கள் தம்மை அதிகூடியதாக வெளிப்படுத்த தயங்குவதால் உருவழிந்து விடுகின்றன [இத், கும்],<br>• அரச சேமலாபத்திற்கு தகுதி பெறுவதற்காக கொருளாதார உண்மைகளை மறைத்தல் [வட், கும்].<br><br>*முறைசார்ந்த, முறைசாரா பொருளாதார நிறுவனங்களின் சேவைகளைப் பெறல்:*<br>• வங்கிகள், கடன் கொடுப்பவர்கள் அல்லது முதலாளி (வியாபாரி), உறவினர்கள் போன்றோரிடமிருந்து கடன் பெறுவதற்காக ஆபரணங்களை அடகு வைத்தல்,<br>• சிறிய அளவிலான செலவுகளுக்காக பாரம்பரிய குழுநிலை சேமிப்புகளை (சீட்டு) மேற்கொள்ளல் [வட், கல்]. |

அட்டவணை 2: ஜீவனோபாய உத்திகளின் மூன்று தூண்கள்: திருகோணமலையிலிருந்து பெறப்பட்ட உதாரணங்கள் (மூலம்: **Korf et al**, 2001)

விமர்சனங்கள்: இத் = இத்திக்குளம்; கல் = கல்யாணபுர; கும் = கும்புறுப்பிட்டி; வட் = வட்டம்

## 5 ஈடுகொடுத்தல் அல்லது ஏற்றவாறு மாற்றியமைத்தல் - இவை யுத்தத்திற்காக அல்லது வறுமை நிலைக்கா?

மோதலானது, வறுமை நிலையை வெளிப்படுத்தி அதனூடு ஜீவனோபாய உத்திகளை வெளிக் கொணர்ந்துள்ளதா? இலங்கையிலுள்ள மோதல் நடக்கும் பகுதிகளில் உள்ள கிராமங்கள், அங்கு அமைதிச் சூழலில் உள்ள பகுதிகளிலுள்ள கிராமங்களுடன் ஒப்பிடுகையில் எவ்வாறு வித்தியாசப்படுகின்றன? ஜீவனோபாயத்தின் பல்வேறு மூலங்களின் மீது நானாவித காரணிகளும் தாக்கங்களும் ஒன்றிணைந்து உண்டாக்கும் விளைவே ஈடுகொடு தந்திரோபாயங்களாகும். - மோதல் போன்ற தனி ஒரு காரணியின் விளைவு அல்ல. ஆகவே, வறுமைக்கு ஈடுகொடுத்தலுக்கும் மோதலுக்கு ஈடுகொடுத்தலுக்கும் இடையில் ஒரு உறுதியான வேறுபாட்டைக் காண்பது கடினமானது. எவ்வாறாயினும், எமது மாதிரியிலுள்ள, சொந்த உயிருக்கு ஏற்படும் அபாய நிலையை முகாமைத்துவப்படுத்தும் முதலாவது தூண், மோதலுடனும் மோதலுடன் தொடர்புடைய உயிருக்குள்ள அதிகரித்த அபாய நிலையுடனும் தெளிவாக தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. அதைத் தவிர, நிச்சயமற்ற நிலையும் பாதுகாப்பின்மையும் கூட முதலிடுவதிலுள்ள பொருளாதார அபாயங்களை அதிகரிக்கிறது. இரண்டாவதும் மூன்றாவதுமான தூண்களுடைய பலவிதமான ஈடுகொடு தந்திரோபாயங்களில் இந்தக் காரணி தெளிவாகப் புலனாகிறது. இம்மாதிரியாக, அதிகரித்த பொருளாதார அபாயநிலை பருமட்ட பொருளாதார நிலைமைகளால் கூட உருவாக்கப்படலாம், (உ+ம்) திறந்த சந்தை கொள்கைகளின் ஊடாக ஏற்படும் பொருளாதார அபாயநிலை. இம்மாதிரியான தூண்டப்பட்ட அபாயநிலைகளுக்கு முகம் கொடுத்தல், பாதுகாப்பு நிலைமைகளால் தூண்டப்பட்ட பொருளாதார அபாயநிலைகளுக்கு முகம் கொடுத்தலை ஒத்ததாக இருக்கலாம். அரச சேமலாபங்களும் நிவாரணங்களும், மக்கள் ஆழமான வறுமை நிலைக்கு பெருமளவில் வீழ்ச்சியுறுவதை தடுக்கும் என சிலர் வாதிடுகின்றனர் (O'Sullivan 1997). ஆய்வு இடங்களிலே, சமுர்த்தி உணவு முத்திரைகள், உலர் உணவுப்பங்கீடுகள் மற்றும் மீள் குடியமர்தலுக்கான உதவி ஆகிய வடிவங்களிலான அரச சேமலாபங்கள் ஒரு பிரதான உணவு மற்றும் வருமான மார்க்கங்களாகும். இந்த வளங்களிலிருந்து தேவையானவற்றைப் பெற்றுக் கொள்வதற்கு மக்கள் தந்திரோபாயங்களை மாற்றியமைத்துள்ளனர். மோதலின் நீடித்த காலப்பகுதியால் குடும்பங்களின் முதன்மை ஆதனங்கள் வெறுமையாக்கப்படுவதற்கான ஒரு அறிகுறியாகவும் இது இருக்கலாம்: ஒவ்வொரு அதிர்ச்சிக்குப் பின்னர் குடும்பங்கள் தமது முதன்மை கையிருப்புகளை படிப்படியாக வெறுமையாகி இவ்வாறாக வெளி உதவிகளில் தாம் தங்கியிருக்கும் நிலையை அதிகரிக்கின்றன. அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்பட்ட நிவாரணத்தைக் கருத்தில் கொண்ட உதவிகள், ஒரு பாதுகாப்பற்ற சூழலில் அரிதான ஆதனங்களை முதலிடுவதிலும் பார்க்க, இந்த நிதிகளிலிருந்து தேவையானவற்றைப் பெற்றுக் கொள்வதற்கான குடும்பங்களின் தந்திரோபாயங்களுக்கான மறுபயிற்சிக்கு உதவியிருக்கக்கூடும்.

ஆதரவு வலைப்பின்னல்களில் அதிகாரமும் பரஸ்பர பரிமாற்றலும், மோதலினால் சிதைவுண்ட இலங்கையின் பகுதிகளில் வாழும் மக்களுடைய உயிர்வாழும் தந்திரோபாயங்களை தீர்மானிப்பதில் மேலும் மேலும் கூடுதல் பங்கினை வகிக்கின்றன என்பதை கருத்திற் கொள்ளுதல் பிரதானமாகும் (ஜீவனோபாய உத்திகளின் மூன்றாவது தூண்: வெளிவாரி ஆதரவினைப் பெறல்). அரசியல் பொருளாதார சம்பந்தப்பட்ட விடயங்களில் இனவடிவம் பெற்ற செயல்காரியங்களை எம்மால் அவதானிக்க முடிகிறது: விவசாய வளங்களுக்கும் சந்தை சேவைகளுக்குமான உரித்துடைமைகள் மூன்று இனங்கள் மத்தியிலும் சமமற்ற முறையில் விநியோகிக்கப்பட்டுள்ளது. தமிழ் மக்கள் போராளிகளுடன் ஒத்துழைப்பதாக ஆயுதப் படையினர் சந்தேகிப்பதால், ஒப்பிட்டளவில் அவர்கள் ஒரு சாதகமற்ற நிலையில் அவதியுறுகிறார்கள். தமது பொருட்களை இடத்திற்கிடம் நகர்த்துவதற்கு தமிழ் வர்த்தகர்கள் பாரிய பிரச்சனைகளக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ள வேளையில், சிங்களவர்களும் முஸ்லிம்களும் வர்த்தக வலைப்பின்னல்களில் பெருமளவில் ஆதிக்கம் செலுத்துகின்றனர் ஏனெனில் அவர்களால் இராணுவத்தினருடன் கூட்டுக்களை ஏற்படுத்துவதன் மூலம் இராணுவ சோதனைச் சாவடிகள் ஊடாக இலகுவில் போக்குவரவு செய்யமுடிகிறது. இதற்கு மேலதிகமாக, எல்லைப்புற கிராமங்களில் வசிக்கும் சிங்கள விவசாயிகளுக்கு தாராளமாக உதவிகளை வழங்குவதன் மூலம் அந்தப் பகுதிகளில் அவர்கள் தொடர்ந்தும் இருப்பதற்கு மத்திய அரசாங்கம் உற்சாகமளிக்கிறது. தமது சமூகத்தினரைப் பாதுகாப்பதற்காக இந்தக் கிராமத்தில் வசிக்கும் பெருந் தொகையான இளம் சிங்களவர்களை ஊர்காவல் படையினராக அரசாங்கம் வேலைக்கமர்த்துகிறது. இது அவர்களுக்கு ஒரு கணிசமானதும் நிலையானதுமான வருமானத்தை ஈட்டிக்கொடுக்கிறது. இந்தப் பணப் புழக்கம் இந்த வேலைகள் மூலமாகவன்றி வேறு வகையாக இந்தக் கிராமத்திற்கு கிடைக்காது. மறுபக்கத்தே, முஸ்லீம் வர்த்தகர்களிடமிருந்து வரிகள் அறவிடுவதன் மூலம் அவர்கள் அடைந்த இலாபத்தின் ஒரு பங்கினை, பொது நோக்கத்திற்கு செலவிடுவதற்காக போராளிகள் பெற்றுக் கொள்கிறார்கள்.

இவ்வகையான இடைநடவடிக்கைகள், பொருளாதார வர்த்தகங்களும் செயல்காரியங்களும் இராணுவ அதிகாரங்களைக் கொணடவர்களை சம்பந்தப்படுத்தும் ஒரு 'யுத்தநிலை பொருளாதாரத்தின்' ஒரு வடிவமாக உருவெடுக்கிறது. நீடித்த காலப் பகுதியில் இது கடுமையான விளைவுகளைக் கொண்டதாக இருக்கும்: அரசியல் முதலினுடைய மேலாதிக்கத்தினாலும் ஆதரவினாலும் சமூக முதலுக்கு (சமூக வலைப்பின்னல்கள் மூலமான ஆதரவு) படிப்படியாக அறியாத முறையில் கெடுதி உண்டாக்கப்படுகிறது: அரசியல் மற்றும் இராணுவ அதிகாரங்களைக் கொண்டவர்களுடன் மேலும் நெருக்கமான தொடர்புடையவர்களுக்கு உரித்துடைமைகள் கிடைக்கின்றன. இம்மாதிரியான நடைமுறைகளிலுள்ள பிரச்சனை யாதெனில், உள்நாட்டு யுத்தத்தை தீவிரமாக்கிய இனங்களுக்கிடையிலான மனத்தாங்கல்களை இது பலப்படுத்துகிறது.

## முடிவுரை: அவசர நிலைமக்குப் பிந்திய ஜீவனேபபாயங்கள்

2002 ஆம் ஆண்டு மாசி மாதம், இலங்கை அரசும் LTTE யும் ஒரு யுத்தநிறுத்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டன. இதன் அடுத்த கட்டமாக 2002 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் தாய்லாந்தில் LTTE யிற்கும் இலங்கை அரசிற்கும் இடையே நோர்வே நாட்டினுடைய மத்தியஸ்துடன் ஆரம்பமாக இருக்கும் சமாதான செயல்முறைகளின் ஆரம்பமாக இது புரிந்து

கொள்ளப்படுகிறது. இந்த நலிவான சமாதான செயல்முறையைப் பற்றி மோதலினால் பாதிப்புற்ற பகுதிகளில் வாழும் மக்கள் பெருமளவில் முன்னெச்சரிக்கையுடன் இருக்கின்ற போதிலும், இலங்கையின் போரினால் பாதிப்புற்ற வடக்கு கிழக்கில் வாழும் மக்களுக்கு வாழ்க்கை முறைகளும் வாய்ப்புகளும் கணிசமான அளவில் மாறியுள்ளன. பாதிப்புறு சூழலில் ஏற்பட்ட மிகப் பெரிய மாற்றங்கள் யாதெனில் மக்களால் இப்போது மேலும் சுதந்திரமாக நடமாட முடிவது, மீன்பிடித் தடை பெருமளவில் விலக்கப்பட்டுள்ளமை, இப்பகுதிகளுக்கு புதிய வியாபாரிகளின் வருகையால் அங்குள்ள விவசாயிகளுக்கும் மீன்பிடியாளர்களுக்கும் சந்தை வாய்ப்புகள் அதிகரிக்கின்றமை ஆகியனவாகும். என்றாலும், விவசாயிகளினுடைய நிலங்கள் கண்ணிகளால் நிரம்பியுள்ளதாலும் சில காணிகளில் தற்போது கூட படையினர் நிலை கொண்டிருப்பதாலும் (உ+ம் யாழ் குடாநாட்டிலுள்ள உயர் பாதுகாப்பு வலயம்) அல்லது தொலைவிலுள்ள பகுதிகளுக்கு போவதற்கு இன்னும் மக்கள் அச்சப்படுவதாலும் அநேகம் விவசாயிகளினால் இன்னும் தமது விவசாய வளங்களை அடைய முடியாதுள்ளது. புதிய பாதிப்புறு சூழலுக்கு பிரதியுத்தரமாக (response) எவ்வாறு ஜீவனோபாய உத்திகள் இப்போது மாறுகின்றன என்பதைப்பற்றி, குறிப்பாக, கீழ்வரும் மூன்று ஆராய்ச்சிக் கேள்விகளையும் நோக்கமாக வைத்து ஆராய்வது அத்தியாவசியமாகிறது.

- சமாதானத்தினுடைய நீண்டகால எதிர்பார்ப்புகள் நலிவாக இருக்கும் வேளையில், தற்போதுள்ள புதிய நடமாட்ட சுதந்திரத்திற்கு பிரதியுத்தரமாக என்ன புதிய ஈடுகொடு தந்திரோபாயங்களை மக்கள் உருவாக்குகின்றனர்?
- இந்த மாற்றமடையும் செயன்முறையின் போது எந்த மாற்றிஅமை தந்திரோபாயங்கள் தற்போதும் வழக்கத்தில் இருக்கின்றன, எவை கைவிடப்பட்டுள்ளன அல்லது கணிசமான அளவு மீளமைக்கப்பட்டுள்ளன?
- உள்ளூர் மட்டங்களில் நானாவித அதிகாரம் படைத்தவர்களினிடையே (படையினர், விடுதலைப்புலிகள், அரச நிர்வாகம்) சமநிலையை இந்த சமாதான செயன்முறை எவ்விதம் பாதிக்கிறது மற்றும் விவசாய வளங்களைப் பெறும் இனப் பாகுபாடான உரித்துடைமைகளை இது எவ்விதம் பாதிக்கிறது?

நன்றியுரை:

IFSP-CATAD செயற்திட்டம் 2001 ஜேர்மனி நாட்டிலுள்ள பேர்ளின் நகர ஹம்போல்ட் பல்கலைக்கழக விவசாய மேம்பாட்டிற்கான உயர்தர பயிற்சி நிலையத்தினதும் (CATAD) திருகோணமலை ஒருங்கிணைக்கப்பட்ட உணவுப் பாதுகாப்பு செயற்திட்டத்தினதும் (IFSP) ஒரு கூட்டு முயற்சியாகும். இந்த ஆய்வு, ஜேர்மனி–இலங்கை நாட்டைச் சேர்ந்த பினவரும் பல்துறை நிபுணத்துவமுடைய இளம் ஆராய்ச்சியாளர்களையும், தொழில்புரிநர்களையும் கொண்ட ஒரு அணியினால் நடத்தப்பட்டது – Ratnayake, M. Abeyratne, K. Devarajah, Dharsanie Dharmarajah, Tobias Flamig, T. Sakthivel, Christine Schenk, Monica Ziebell, Julia Ziegler மற்றும் இந்த ஆவணத்தின் ஆசிரியர்கள் ஆய்வுக் குழுவினரது இரண்டு அணித் தலைவர்களாகவும் விளங்கினர். IFSP-CATAD செயற்திட்டத்தை ஆரம்பித்து வைத்ததிற்காக IFSP யினுடைய GTZ குழுத்தலைவர் கலாநிதி Dedo Geinitz இற்கு ஆசிரியர்கள் நன்றி கூறுகின்றனர். இந்த ஆய்வு GTZ, ஜேர்மன் பொருளாதார கூட்டுறவு மேம்பாடு (BMZ) அமைச்சினாலும் பேர்ளின் ஹம்போல்ட் பல்கலைக்கழகத்தினாலும் நிதியுதவி செய்யப்பட்டது.

தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஆய்வுகளுக்கான நிதி "அபிவிருத்தியடையும் நாடுகளில் இயற்கை வள முகாமைத்துவத்திற்கான நிர்ணய காரணிகளும் மாற்று நிறுவனங்களின் தாக்கங்களும்" (Determinants and effects of alternative institutions for natural resource management in developing countries) ) ஆராய்ச்சித் திட்டத்திற்கு ஊடாக பொ(B)ண் (Bonn) பல்கலைக்கழகத்து அபிவிருத்தி ஆராய்ச்சி நிலையத்திலுள்ள Robert-Bosch ஸ்தாபனத்தினால் வழங்கப்படுகிறது.

**References:**


Alwang, J.; Siegel, P.B. and S.L. Jorgensen (2001): *Vulnerability: A View from Different Disciplines*. Social Protection Discussion Paper No. 0115, Washington D.C.: World Bank.

BMZ. 1998. *Integrated Food Security Programmes in German Development Co-operation – A Guideline for Project Work*. Bonn: Bundesministerium für wirtschaftliche Zusammenarbeit und Entwicklung (BMZ).

BMZ. 1997. *Sector Concept: Food Security and Food Aid as Instruments of Development Co-operation*. BMZ-aktuell No. 074. Bonn: Bundesministerium für wirtschaftliche Zusammenarbeit und Entwicklung (BMZ).

Bohle, H.-G. (1993): ‚The Geography of Vulnerable Food Systems'. In: H.-G. Bohle et al. (eds): *Coping with Vulnerability and Criticality*. Freiburg Studies in Development Geography No. 1. Saarbrücken: Breitenbach Verlag.

Carney, D. (1998): *Sustainable Rural Livelihoods – What contribution can we make?*. London: Department for International Development (DFID).

Chambers, R. (1989): 'Vulnerability, Coping and Policies'. In *IDS Bulletin* XX, 1, 1-7.

DER. 2000. *A Framework for Poverty Reduction in Sri Lanka*. Colombo: Department of External Resources (DER), Government of Sri Lanka.

DFID (2000): *Sustainable Livelihoods Guidance Sheets*. London: Department for International Development.

Goodhand, J.; N. Lewer and D. Hulme (2000): *NGOs and Peace Building. Sri Lanka Study*. Final Report to DFID. Manchester: Institute for Development Policy and Management and Bradford: Department of Peace Studies.

IFSP. 2000. *Conflict Mitigation through Food Security*? Working Paper 36. Trincomalee: Integrated Food Security Programme (IFSP).

Kelegama, Saman. 2000. 'Food Security Issues in Sri Lanka'. In S.G. Samarasinghe. ed. *Hector Kobbekaduwa Fecilitation Volume*. Colombo: Hector Kobbekaduwa Trust.

Korf, B. et al. (2001): *Conflict – Threat or Opportunity? Land Use and Coping Strategies of War-affected Communities in Trincomalee, Sri Lanka*. Berlin: Schriftenreihe des Seminars für Ländliche Entwicklung (SLE), Nr. S 195.

NEIAP. 2000. *District Baseline Social Profile Trincomalee District*. Trincomalee: Northeast Irrigated Agriculture Project (NEIAP).

O'Sullivan, M. (1997): 'Household Entitlements During Wartime: The Experience of Sri Lanka'. *Oxford Development Studies*, XXV, 1, 95-121

PIMU. 2001. *Draft Consultancy Report of Social Sector Specialist*. ADB Pre-Appraisal Mission. TA No. 3542 – SRI (Preparation of the Northeast Emergency Rehabilitation Project). Colombo: Poverty Impact Monitoring Unit (PIMU).

Reinhard, Ines and Daniela Kramer. 1999. *Baseline Survey on Health and Nutrition*. Working Paper 24. Trincomalee: Integrated Food Security Programme (IFSP).

Scoones, I. (1998): Sustainable Rural Livelihoods: A Framework of Analysis. Working Paper No. 72. Brighton: Institute of Development Studies (IDS).

Sen, Amarthya K. 1981. Poverty and Famines: An Essay on Entitlements and Deprivation. Oxford: Clarendon Press.

Thompson, Anne and Manfred Metz. 1997. Implications of economic policy for food security – A training manual. Training Materials for Agricultural Planning No. 40. Rome: Food and Agricultural Organisation (FAO).

UNDP. 1998. National Human Development Report 1999. Colombo: United Nations Development Programme (UNDP).

Vaulmaus, M. 2001. *Guidelines for Impact Monitoring in Economic and Employment Promotion Projects with Special Reference to Poverty Reduction Impacts*. Eschborn: Deutsche Gesellschaft für Technische Zusammenarbeit mbH (GTZ).

World Bank. 2000. *Sri Lanka: Recapturing Missed Opportunities*. Report No. 20430-CE. Washington D.C.: The World Bank.

Ziebell, Monika and Julia Ziegler (2001): *Converting Threats into Opportunities? Ithikulam – Village Profile*. Working Paper No. 40. Trincomalee: Integrated Food Security Programme (IFSP).